SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:5, Pages:56
DECEMBER-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

டிசம்பர் 2023,
விலை ரூ.20/-



வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு
தங்கத்திருத்தேர்
23-12-2023

# ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி



திருப்பதி அலிபிரி அருகில் சேஷாசல மலையை ஒட்டி அமைந்துள்ளது ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம். கபில முனிவரின் தவத்திற்கு மனமிறங்கி பரமசிவனே கபிலேஸ்வரராக எழுந்தருளியுள்ளார். இங்கு புனிதமான கபில தீர்த்தம் உள்ளது. கார்த்திகை மாதத்தில் ஏராளமான பக்தர்கள் புனித நீராடுவது சிறப்பான ஒன்றாகும். திருப்பதி பேருந்து மற்றும் இரயில் நிலையத்திலிருந்து ஆட்டோ மூலமாக 10 நிமிடத்திற்குள் இவ்வாலயம் சென்றடையலாம். இவ்வாலயத்தில் மார்கழி மாதத்தில் தெப்போத்ஸவமும், திருவாதிரை நட்சத்திரம் அன்று சிறப்பு உத்ஸவமும் நடைபெறும்.

## திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம்

| | | |
|---|---|---|
| 22-12-2023 | வெள்ளிக்கிழமை | ஸ்ரீவிக்னேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமி |
| 23-12-2023 | சனிக்கிழமை | ஸ்ரீசுப்ரமண்ய ஸ்வாமி |
| 24-12-2023 | ஞாயிற்றுக்கிழமை | ஸ்ரீசோமஸ்கந்த ஸ்வாமி |
| 25-12-2023 | திங்கட்கிழமை | ஸ்ரீகாமாக்ஷி தாயார் |
| 26-12-2023 | செவ்வாய்க்கிழமை | ஸ்ரீ சண்டிகேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமி |

27-12-2023
புதன்
திருப்பதி
ஸ்ரீகபிலேஸ்வர
ஸ்வாமி
ஆருத்ரா
தரிசனம்





*கார்பண்யதே$_3$ாஷோபஹதஸ்வப$_4$ாவ:*
*ப்ருச்ச$_2$ாமி த்வாம் த$_4$ர்மஸம்மூட$_4$சேதா: ।*
*யச்ச்$_2$ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்$_3$ரூஹி தந்மே*
*சிஷ்யஸ்தேsஹம் சாதி$_4$ மாம் த்வாம் ப்ரபந்தம் ॥*

**கோழைத்தனத்தினால் சீரழிந்த ஸ்வபாவம் கொண்டவனும், தர்ம விஷயத்தில் குழம்பிய மனதுடையவனுமான நான் உங்களிடம் கேட்பதென்னவென்றால், எந்தச் சாதனை உறுதியாக மேன்மை பயக்கக்கூடுமோ, அதை எனக்குக் கூறுங்கள். நான் உங்களுடைய சீடன். ஆகவே, உங்களைச் சரணடைந்த எனக்கு அறிவுரை கூறுங்கள்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–7*

*மாயனை மன்னு வடமதுரை மைந்தனை*
*தூய பெருநீர் யமுனைத் துறைவனை*
*ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை*
*தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை*
*தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது*
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க*
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்*

**ஆச்சர்யமான செயல்களை உடையவனும், நித்யமான பகவத் சம்பந்தத்தாலே விளங்கா நின்ற வடமதுரைக்கு அரசனும், பரிசுத்தமானதும், ஆழம்மிகு இருப்பதுமான நீரையுடைய யமுனைக் கரையிலே விளையாடுபவனும், இடைக்குலத்தில் திருஅவதரித்தவனும், மங்கல தீபம் போன்றவனும், யசோதையின் திருவயிற்றை விளங்கச் செய்த கண்ணி நுண் சிறுதாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய எம்பிரானை நாம் பரிசுத்தர் களாகக்கிட்டி, நல்மலர் களைத் தூவி, வணங்கி, வாயாரப்பாடி, மனத்தாலே தியானிக்க கழிந்த பாவங்களும், பின்பு நம்மை அறியாமல் வருபவையும் நெருப்பிலிட்ட பஞ்சுபோல உருவழிந்து போகும். ஆகையாலே அவனைப்பாடு.**

*- திருப்பாவை 5*





திருமலை திருப்பதி
தேவஸ்தானம்

# “ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை”



*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 08 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 15 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 15 இலட்சம் |
| | மொத்தம் | - 38 இலட்சம் |

**0877-2263001**
**0877-2263472**

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.38 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.8 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.15 இலட்சமோ/இரவு உணவிற்கு ரூ.15 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**

**துணைச்செயலாட்சித் தலைவர் (நன்கொடையாளர் பிரிவு) எப்.ஏ.சி.,**
**தி.தி.தேவஸ்தானம், திருமலை, ஆந்திர மாநிலம்**

மின்னஞ்சல் : cdmc.ttd@tirumala.org
www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்

டிசம்பர் 2023

மலர் 03 இதழ் 05

## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம் திருப்பாவையும் திருவேங்கடமுடையானும் -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 07 |
| மார்கழி மாத மகிமை -திரு. எஸ். ஸ்ரீதரன், சாத்தூர். | 12 |
| திருவரங்கத்தில் ஏகாதசி உத்ஸவம் -திரு. வீ. சீனிவாசன், இறவாங்குடி. | 14 |
| ஜோதிட சாஸ்திரம் : வேத ஜோதிடத்தில் 12 வீடுகள் - முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை. | 16 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: அயோத்தி என்னும் அணி நகரத்தின் ஜோதி -திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 17 |
| திருப்பாவையும் திருவெம்பாவையும் - முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை. | 20 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள் - குடந்தை ப. சரவணன். | 23 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 24 |
| திருமலையில் அத்யயன உத்ஸவமும் வைகுண்ட ஏகாதசியும் - திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 31 |
| கீதையும் பாவையும் - திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி. | 33 |
| 108 திவ்யதேச வைபவம் : திருநீரகம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 36 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : திருவரங்கப்பெருமாள் அரையர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 39 |
| ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன் - திரு. கிருஷ்ணதுளசி, சென்னை. | 42 |
| ராசிபலன்கள் : டிசம்பர் 2023 -டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 45 |
| நீதிக்கதை : அதிக கோபம் ஆபத்தைத் தரும் -திருமதி சுபா தியாகராஜன், சேலம். | 47 |
| சித்திரக்கதை : கழுதையும் குருவே! | 52 |

சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
“Sapthagiri”, T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : தங்கத்திருத்தேர், திருமலை.
பின்னட்டை : கீதோபதேசம் (சித்திரம்)



உங்களுடன்...

# மார்கழியில் மாயோனைப் போற்றிடுவோம்!

"சூரியனைக் கொண்டு கணிக்கப்படும் தமிழ் காலக் கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டின் ஒன்பதாவது மாதம் மார்கழி மாதமாகும். சூரியன் தனுசு ராசியினுள் புகுந்து வெளியேறும் வரையிலான கால அளவே மார்கழி மாதமாகும். எனவே இம்மாதத்தை தனுர் மாதம் எனவும் கூறுவர்.

இம்மாதம் குளிர் காலத்தின் துவக்கமாகும். இம்மாத இறுதியில் தான் தக்ஷிணாயணம் எனும் சூரியனின் தெற்கு திசை ஓட்டம் முடிவடையும் காலமாகும். பன்னிரு மாதங்களில் ஒரு நாளோ, கிழமையோ மட்டுமே இறைவனுக்கு உரிய நாளாக இருக்கும். ஆனால் மார்கழி மாதம் மட்டுமே அம்மாதம் முழுவதும் இறைவனுக்கு உரிய மாதமாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இம்மாதத்தை தேவர்களுக்கான அதிகாலைப் பொழுதான மாதம் என்று குறிப்பிடுவர். இம்மாதத்தில் தான் கார்காலம் முடிந்து பனி காலம் துவங்கும். இந்தப் பருவ கால மாற்றத்தின் போது அதிகாலை பொழுதான பிரம்ம முகூர்த்த காலத்தின் போது வீசும் காற்றினை சுவாசித்தல் என்பது உடல் நலத்திற்கு நல்லது. இம்மாதம் தான் மனித உடம்பில் சமதட்பவெப்பநிலையையும், திடத்தன்மையையும் கொண்டு வருவதற்கு சரியான நேரமாகும்.

அதுமட்டுமின்றி இம்மாதத்தில் தான் ஓசோன் படலமும் பூமியின் மிக அருகில் அமைந்து இருக்கும். எனவே தான் தூய்மையான காற்றை சுவாசித்து உடல் நிலையையும் மனநிலையையும் காக்கும் பொருட்டு அதி காலையிலேயே இறையடியார்கள் கோயில்களுக்குச் செல்வதும், வீதிகளில் பஜனைகள் செய்வதும் மேற்கொள்கின்றனர். இதனால் மன ஆரோக்கியமும், உடல் ஆரோக்கியமும் ஏற்படுகின்றது. ஆலயங்களிலும், அதிகாலையிலேயே திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி இசைக்கப்படுகின்றன. யமனை வெல்வதற்கான வேள்வியான மிருத்யுஞ்சய ஹோமம் செய்ய சிறந்த மாதமும் இதுவே ஆகும்.

இம்மாதத்திற்கு எவ்வளவு சிறப்புகள் இருந்தால் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் "மாதங்களில் நான் மார்கழி" ஆகிறேன் என்று அருளியிருப்பார் என்பதை நாம் அறிதல் வேண்டும். இது குறித்தே திருப்பாவையில் ஆண்டாளும், திருவெம்பாவையில் மாணிக்கவாசகரும் மார்கழி விரதத்தைப் பற்றி அழகாக பாசுரமிடுகிறார்கள்.

திருமலையில் வருடம் முழுவதும் அதிகாலையில் திருவேங்கடமுடையானை துயிலெழுப்ப சுப்ரபாதம் பாடப் படுகிறது. ஆனால் மார்கழி மாதம் மட்டும் சுப்ரபாதத்திற்கு பதிலாக ஆண்டாளின் திருப்பாவையே அனுசந்திக்கப்படுகிறது. மார்கழி மாத தோமாலை சேவை ஆராதனை, வில்வார்ச்சனை, மார்கழி மாத நைவேத்தியம், சாத்துமுறை என நடைபெறுகின்றன. மார்கழி மாதத்தில் ஜவ்வரிசி தோசை, வெண்பொங்கல், சீரா போன்ற சிறப்பு பிரசாதங்கள் நைவேத்தியங்களாகப் படைக்கப்படுகின்றன. இம்மார்கழி மாதத்தில் மட்டும் திருமலையில் சயன பேரத்திற்கு பதிலாக ஸ்ரீகிருஷ்ணரின் வெள்ளிச் சிலையைத் தங்கத் திருமஞ்சனத்தில் கிடத்துவர். அதே போன்று மார்கழி மாத இறுதி நாளன்று போகிப்பண்டிகை அன்று திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவமும் சிறப்பாக நடைபெறும்.

மேலும், திருமலை திருப்பதி தேவஸ்தான ஆழ்வார் திவ்ய பிரபந்த செயல் திட்டத்தின் வாயிலாக இந்தியாவின் பல வைணவ ஆலயங்களில் ஆண்டாள் அருளிய திருப்பாவை தொடர் சொற்பொழிவு நடைபெறும். மாயோனை போற்றிட ஆண்டாளின் திருப்பாவையைப் பரப்புவதில் தி.தி.தே. மிகப் பெரிய பங்கும் வகிக்கின்றது என்பதில் ஐயமில்லை.

இம்மார்கழி மாதத்தில் வேண்டும் வரங்களை அளித்திடும் மாயோனையும், திருப்பாவையின் மூலம் அவன் புகழினைப் போற்றிடும் ஆண்டாளையும் துதித்து, இவ்வுலகத்தோர் அமைதி, செழிப்பு மற்றும் பேரின்பம் அடையும்படி பிரார்த்திப்போம்.

# திருப்பாவையும் திருவேங்கடமுடையானும்

இதோ மார்கழி மாதம் பிறக்கப் போகிறது. மகாபாரத யுத்தம் மார்கழி யில்தான் நடைபெற்றது. திருப்பாற்கடல் கடையப்பட்டதும் இம்மாதத்தில்தான். இந்திரனால் பெரு மழை வெள்ளம் உருவாக்கப்பட்ட போது, கிருஷ்ணர் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து, கோகுலத்து மக்களைக் காப்பாற்றிய தும் இம்மாதத்தில்தான். இத்தகைய சிறப்புகள் வாய்ந்தது மார்கழி மாதம்.

பகவான் கீதையில், தான் மாதங்களில் மார்கழி மாதமாக இருக்கின்றேன் (*''மாஸாநாம் மார்க ஸீர்ஷா அஹம்''* அத்தியாயம் – 10 – 35) என்பதை வெளிப்படையாகவே சொல்லி இருக்கின்றார்.

அவன் கீதையில், தனக்கு மிகவும் பிடித்த மாதம் மார்கழி என்று சொல்லி யதை, கோதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, தன்னுடைய முதல் பிரபந்தமான திருப்பாவையை, "மார்கழி" என்கின்ற வார்த்தை யில் தொடங்குகின்றாள். திருப்பாவையின் முதல் பாசுரம் இப்படித் தொடங்குகிறது.

*மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;*
*நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!*
*சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!*
*கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,*
*ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,*
*கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்*
*நாராயணனே, நமக்கே பறைதருவான்,*
*பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.*

திருப்பாவை அவதரித்த பிறகு, வைணவ மரபில், மார்கழி மாதத்தை மார்கழி மாதம் என்று சொல்லும் வழக்கம் மாறி, "திருப்பாவை மாதம்" என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. திருமலை அப்பனுக்கு மார்கழி மாதம் முழுவதுமே சுப்ரபாதத் திற்கு பதிலாக ஆண்டாளின் திருப்பாவையைத்தான் சேவிக் கிறார்கள்.

இந்த நியமனத்தை ஒட்டித்தான், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆழ்வார் திவ்ய பிரபந்த திட்டம் மூலம், நாடெங்கும் ஆண்டாளின் திருப்பாவையைப் பரப்பும் வகையில் திட்டமானது செயல்பட்டு வருகிறது. பல நூறு ஊர்களில், மகாவித்வான்கள் ஆண்டாளின் திருப்பாவையை விளக்கி, உரையாற்றுகின்றனர். திருப்பாவை முடிந்ததும், திருமலை திருப்பதியில் கோதா பரிணயம் நடக்கிறது. இவைகளிலிருந்து



**– பேராசிரியர்**
**எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி,**
**94434 39963.**







திருமலையப்பனோடு ஆண்டாளுக்குள்ள ஈடுபாட்டை பற்பல இடங்களில் மிக வெளிப்படையாக விளக்குவது நாச்சியார் திருமொழியின் விண்ணீல மேலாப்பு என்னும் பதிகம். ஆண்டாள் தனக்கு மணாளனாக திருமலையப்பனை வரித்துக் கொண்டு தான் பிரபந்தங்களை அருளிச் செய்தாள். குறிப்பாக திருப்பாவையை அருளிச் செய்தாள் என்பதற்கு மற்றும் ஒரு சான்றுதான் திருப்பாவையின் இந்தத் தனியன்.

*சூடிக்கொடுத்த சுடர்க் கொடியே!*
*தொல்பாவை*
*பாடி அருளவல்ல பல்வளையாய்! நாடிநீ*
*வேங்கடவற்கு என்னை விதி என்ற*
*இம்மாற்றம்*
*நாம்கடவா வண்ணமே நல்கு.*
*“வேங்கடவற்கு என்னை விதி”*

என்பது ஆண்டாள் திருவுள்ளமல்லவா!

திருவேங்கடமுடையானுக்கும் திருப்பாவைக்கும் உள்ள சம்பந்தம் நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

பெரியாழ்வார் திருமகளாய் அவதாரம் செய்த கோதை நாச்சியார், பகவானை எப்படியாவது அடைய வேண்டும் என்கிற உறுதிப்பாட்டுடன், கண்ணனை அடைய ஆயர்குடிப் பெண்கள் அனு சரித்த நோன்பினை, முன்னெடுக்கின்றாள். தன்னை ஆயர்குலப் பெண்ணாகவே பாவித்துக் கொள்ளு கிறாள். அவளுடைய பேச்சும் செயலும் ஆயர் குலப் பெண்ணைப் போலவே இடைப்பேச்சும் முடை நாற்றமுமாக மாறியது என ஆசாரியர்கள் அற்புத மாக உரை வரைந்திருக்கிறார்கள்.

இப்பொழுது ஒரு கேள்வி நமக்கு எழுகின்றது. ஆயர் குலத்தில் பிறந்த கண்ணனை அடைய வேண்டும் என்று எண்ணிய ஆண்டாள் ஆயர் குலப் பெண்ணாக மாறியது சரி. ஆயர் குலத்துக்கும் திருமலையப்பனுக்கும் உள்ள தொடர்பு என்ன?

கண்ணனின் வளர்ப்புத் தாயான யசோதையால், கண்ணனின் திருமணத்தைக் காண இயலவில்லை. அதை எண்ணி அவள் வருந்திய நிலையில், அந்த யசோதையையே வகுளமாலிகையாகத் திருமலை யில் பிறக்க வைத்தார் திருமால். வகுளமாலிகை ஸ்ரீநிவாசனுக்கும் பத்மாவதிக்கும் திருமணத்தை ஏற்பாடு செய்து, தானே முன் நின்று நடத்தி வைத்துக் கண்ணாரக் கண்டு களித்தாள். யசோதைதான் வகுளமாலிகை என்கிறபோது ஆயர் குலத் தொடர்பு கிடைத்து விடுகிறது. புற்றில் மறைந்திருந்த நாராயணனை ஓர் இடையனும் பசுவும் தானே உலகுக்கு அறிவிக்கிறார்கள். இந்த அடிப்படையில் திருப்பாவையில் வருகின்ற *“ஆயர் குலத்தில் தோன்றிய அணிவிளக்கு”* என்கின்ற வரியும், *“தாயை குடல் விளக்கம் செய்த தாமோதரன்”* என்கின்ற வரியும், திருவேங்கடமுடையானுக்கு பொருத்தமான தாக இருப்பதை நாம் அனுபவிக்கலாம்.

மார்கழி மாதத்தில் திருப்பாவையைப் பாடிக் கொண்டு திருக்கோயிலுக்குச் செல்வது ஒரு யாத்திரையாக இருக்கும். இதற்கு ஆன்ம யாத்திரை என்று பெரியவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். கீழே உள்ள பாசுரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

*கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறு வீடு*
*மேய்வான் பரந்தன காண், மிக்குள்ள*
*பிள்ளைகளும்*
*போவான் போகின்றாரைப் போகாமல் காத்து*
*உன்னைக்*
*கூவுவான் வந்து நின்றோம்; கோதுகலம்*
*உடைய*

*பாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு*
*மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய*
*தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்,*
*ஆவாவென்று ஆராய்ந்து அருள் ஏலோர்*
*எம்பாவாய்*

பெண்கள் மார்கழி நீராடச் செல்கின்றார்கள். அதிலே ஒரு பெண் தங்கி விடுகின்றாள். அவள் இல்லாமல் கண்ணனை நாம் சென்று சேவிப்பது முறையல்ல; ஒரு அடியாரை விட்டு விட்டு கண்ணனை அணுகக் கூடாது என்பதற்காக போகின்றவர்களை தடுத்து நிறுத்தி, "நாங்கள் அவளை அழைத்து வருகின்றோம்" என்று போய் அழைத்து வருகின்றார்கள், (திருவேங்கட யாத்திரை போலே) போகையையே பிரயோஜனமாகக் கொண்டு போகின்ற என்று உரையிட்டு இருக்கிறார் வியாக்யான சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை. இதிலிருந்து திருப்பாவை என்கிற பிரபந்தத்தில் திருவேங்கட முடையானுக்கு உள்ள தொடர்பு எவ்வளவு அழுத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்த பாசுரம் தூமணி மாடம். இந்த பாசுரத்தில் வருகின்ற, மாமாயன், மாதவன், வைகுந்தன் என்ற மூன்று நாமங்களை திருவேங்கடமுடையானைக் குறிக்கிறது என்று எடுத்துக் கொள்ளத் தடை இல்லை. நீங்காத செல்வத்தை அருள்பவன் திருவேங்கடவன். பெரிய பிராட்டியா ருக்காக திருச்சுகனூரில் தவமிருந்தவன் (மாதவன்). திருமலை திவ்ய தேசமானது வைகுண்டம் (கலியுக வைகுந்தம்).

அவன் குற்றம் ஒன்றில்லாத கோவலன். முகில் வண்ணன். எப்பொழுதும் பனித்தலை வீழ அவன் வாசல் கடை பற்றியே நிற்க வேண்டும். எல்லோருடைய மனத்திற்கும் இனியவன் (மனத்துக்கினியான்) என்பதால் தான் இத்தனைக் கூட்டம். அவன் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன். இந்தச் சங்கு சக்கரங்களைத் தான் மறுபடியும் எம்பெருமானார் அவருடைய தடம் ஆகிய தோளில் எழுந்து அருளச் செய்தார். தாமரை போன்ற கண்களை உடையவன் என்பதால் பங்கயக் கண்ணன். வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பாக விளங்குவதனால், கப்பம் தவிர்க்கும் கலியாக விளங்குகின்றவன். செப்பமுடையவன். திறலுடையவன்.

செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலன். உலகில் தோற்றமாய் நின்ற சுடராக இருப்பவன். எல்லோரும் அவருடைய திருமுகத்தையே பார்த்து

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*கிராதரூபீ வரதோ$_3$டத$_2$ தே$_3$வ்யா க$_3$ச்சே$_2$ம ராமாநுஜ ஸாது$_4$ காஞ்சீம் ।*
*இத்யக்$_3$ரகா$_3$மீ ப்ரியயா ஸ பீத்வா தத்$_3$த$_3$த்தகூபோத$_3$கமந்தராஸீத் ॥*
(26)



**தனது மனத்துக்கினிய பெருந்தேவியோடு கூடிய வரதராஜனும் வேடவுருவைத் தரித்து வந்து "இராமாநுஜரே! காஞ்சியை எளிதில் அடைவோம்" என்று கூறி, அவருக்கு முன்னே வழிகாட்டிச் சென்று, இராமாநுஜரிடம் வேண்டிப்பெற்ற சாலைக்கிணற்று நீரை தேவியோடு கூடப்பருகி மறைந்தான்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

## கண்ணன் கருத்துரை



*யத்கரோஷி யதச்னாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।*
*யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் ॥*

(9-27)

**அருச்சுனா! நீ உனக்காக எதைச் செய்தாலும், எதை உண்டாலும், எத்தகைய சிறு வேள்வி செய்தாலும், என்ன தானம் கொடுத்தாலும், எப்படிப்பட்ட தவம் செய்தாலும் அதனைப் பக்தியோடு என்னிடம் ஒப்படைத்துவிடு.**

தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.



அவனுடைய அருட்கருணை நம் மீது சிறுச்சிறுதே விழியாவோ என்று எதிர்பார்த்துக் கிடைத்து விட்டால் எங்கள் மேல் சாபம் இழிந்தோம் என்று நிற்பதையும் காண்கின்றோம். திருமலை அப்பன் கம்பீரமாக புறப்பட்டு திருவீதி வலம் வந்து, சீரிய சிங்காசனத்தில் வீற்றிருந்து (ஆஸ்தானம்) அருள் தருவதையும் தரிசிக்கும் போது "மாரி மலை முழஞ்சில்" பாசுரம் கட்டாயம் நினைவுக்கு வரும்.

திருமலையப்பனுக்கு ஏழுமலையான் என்று பெயர். ஸப்தகிரீசன் என்று சொல்வார்கள். கிருஷ்ணாவதாரத்தில் ஆயர்களைக் காப்பதற்காக ஏழு நாட்கள் சுண்டு விரலால் மலையைத் தாங்கிக் கொண்டிருந்தான் எம்பெருமான்.

நம்மைத் தாங்கிக் கொண்டு இருந்தானே, அவனைத் தாங்கும் பேறு நமக்குக் கிடைக்க வேண்டுமே என்று ஆசைப்பட்ட மலையினுடைய பிரார்த்தனைக்கு இணங்க, கலிகாலத்தில் ஏழு மலைகள் அவனைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

நம்மாழ்வார் திருமலையப்பன் விஷயத்திலே பாடுகின்றார்.

*குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்*
*அன்று ஞாலம் அளந்த பிரான், பரன்*
*சென்று சேர் திருவேங்கட மா மலை*
*ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே.*

இப்பாசுரத்தை அப்படியே பிரதிபலிப்பது போல்,

*"அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி...*
*குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி"*

என்று திருப்பாவையில் பாடுகின்றாள் ஆண்டாள்.

"என்றென்றும் சேவகமே ஏற்றிப் பறை கொள்வான், இன்று யாம் இங்கு வந்தோம் இரங்கு" என்கின்ற திருப்பாவை விஷயத்தைத்தான் நம்மாழ்வாரும் திருவேங்கடமுடையானுக்கு, *"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்"* என்று பாரிக்கிறார்.

குன்று குடையாய் எடுத்ததினால் இந்திரனுக்குக் கோபம் வருகின்றது. அவன் கண்ணனை எதிர்க்கின்றான். கடைசியில் தோற்று, கண்ணன் திருவடி பணிகின்றான். அது மட்டு மில்லை கண்ணனுக்கு கோவிந்த பட்டா பிஷேகமும் செய்கின் றான்.

அந்த கோவிந்தன் தான் "கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா" என்ற 27 ஆம் பாசுரத்தின் முதல் பாசுர வரியாலே அழைக்கப்படும் திருமலையப்பன். திருமலையப்பனை "கோவிந்தா கோவிந்தா" என்று அழைத்துக் கொண்டுதானே செல்லுகின்றார்கள். அது மட்டும் இல்லை அவன் குறை ஒன்றும் இல்லாத கோவிந்தன். அதனால் திருமலை அப்பனை வேறு பெயர்களால் அழைப்பதை விரும்புவதில்லை. சகல மக்களும் ஓங்கிய குரலில் கோவிந்தா என்று தான் அவரை அழைக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட கோவிந்தனை மார்கழி மாத சிற்றம் சிறு காலையிலே திருப்பாவை பாடி வணங்குவோம்.

பாசுரம் அறிவோம்...

# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் - 89

**இடமிருந்து வலம்**

1. ஆஞ்சநேயரின் குரு....(7)
5. பலராமரின் மனைவி.....(3)
8. ஸ்ரீராமரின் சகோதரி.....(3)
10. கிருஷ்ணரின் தாய் மாமன்....(4)
12. சரஸ்வதி தேவியின் குரு...(8)
17. அர்ச்சுனனின் வில்.....(5)
18. கிருஷ்ணர் அவதரித்தது..(4)யுகம்
22. ஏகலைவனின் மானசீக குரு..(8)

**வலமிருந்து இடம்**

2. அசுர சிற்பி....(3)
4. ஸ்ரீராமரின் குலகுரு......(5)
9. கௌதம முனிவரின் மகன்...(5)
11. சூரியனின் மைந்தன்....(4)
14. சூரியனின் மனைவி.....(4)
16. பிரம்மதேவனின் மனைவி...(5)
20. தேவகுரு.....(6)
21. பரசுராமரிடமிருப்பது....(6)
23. கிருஷ்ணரின் நட்சத்திரம்....(3)

**மேலிருந்து கீழ்**

2. செல்வத்திற்கதிபதி.....(6)
3. இராமர் வளைத்த வில்.....(5)
6. ஸ்ரீராமனின் பெண்பக்தை ....(3)
7. அனுமனின் நட்சத்திரம்....(3)
15. அத்திரி ரிஷியின் மனைவி.....(4)

**கீழிருந்து மேல்**

9. சூரியனின் மகன்.....(6)
13. அசுர குரு....(8)
17. ஸ்ரீகிருஷ்ணர் ....(5) தலையில் நர்த்தனமாடினார்
19. ரேணுகா தேவியின் மகன்....(6)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | ■ | ■ | | | 2 |
| | | | 3 | 4 | 5 | | | 6 | | ■ | |
| | ■ | ■ | | ■ | ■ | 7 | ■ | | | ■ | |
| | ■ | ■ | | ■ | ■ | | ■ | | | ■ | |
| 8 | | | | ■ | ■ | | ■ | ■ | | | |
| | | ■ | | ■ | | | | | 9 | | |
| | | ■ | 10 | | | | | | 11 | | ■ |
| | | 12 | | | | | | | | | ■ |
| 13 | | | | | 14 | 15 | | | | | 16 |
| | 17 | | | | | | ■ | 18 | | 19 | |
| ■ | | | | | 20 | | | | | | 21 |
| 22 | | | | | | | | ■ | | | 23 |


தொகுப்பு :
திருமதி இராஜகுமாரி, ஆரணி
99762 38430



புதிருக்கு விடை அறிய
22ம் பக்கம்
பார்க்கவும்...




## மங்கள சுலோகங்கள்

*அதிக்ரூர மஹாகாய கல்பாந்த தஹநோபம ।*
*பைரவாய நமஸ்துப்யம் அநுக்ஞாம் தா துமர்ஹஸி ॥*

மிகவும் கொடியவரானவரும், பெரும் சரீரத்தை உடையவரும், கல்ப முடிவின் தீப்பிழம்பினை ஒத்தவருமான பைரவரே! உனக்கு வணக்கம்; ஸ்நானம் செய்வதற்கான அனுமதியை வழங்குவாயாக!.

# மார்கழி மாத மகிமை





– திரு. எஸ். ஸ்ரீதரன்,
சாத்தூர்,
63808 73262.

தமிழ் மாதங்களில் மார்கழி மாதம் ஒன்பதாவது மாதமாகும். இந்த மாதம் முழுவதும் இறைவனுக்கு உகந்ததாகவே போற்றப்படுகிறது. ஒரு ஆண்டில் பதினோரு மாதங்கள் கோயில்களுக்குச் செல்ல இயலாதவர்கள் மார்கழி மாதம் மட்டும் கோயிலுக்குச் சென்றாலே வருடம் முழுவதும் கோயிலுக்குச் சென்ற பலன்கள் கிடைத்துவிடும் என்பது ஐதீகம். எல்லாக் கஷ்டங்களும் நீங்கி, தை மாதத்திலிருந்து புது வாழ்வு கிடைக்க இம்மாதத்தில் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

'பீடு' (பெருமைகள்) நிறைந்த மாதம் என்பது மருவி 'பீடை' மாதம் என ஆனது. மார்கழி மாதத்தை 'தனுர் மாதம்' என்றும், 'தேவர் மாதம்' என்றும் குறிப்பிடுவர்.

மார்கழி மாதம் முழுவதும் இறைவனை வழிபடுவதால் இம்மாதத்தில் எவ்விதக் குடும்ப மங்கல விழாக்கள் நடத்தப்படுவதில்லை. இம்மாதம் தேவர்களுக்கு அதிகாலை நேரமாகக் கருதப்படுகிறது. இந்த மாதத்தில் அதிகாலை நீராடி ஆலய தரிசனம் செய்வது மிகவும் சிறப்பாகும்.

**மார்கழி மாதத்தில் நடந்த புராணச் சிறப்புகள்:**

மார்கழி மாதத்திற்கு ஏராளமான புராணச் சிறப்புகள் உள்ளன.

மார்கழி மாதத்தில் மகாபாரத யுத்தம் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. ஆண்டாள் திருமாலை திருமணம் புரிந்ததும், திருப்பாற்கடல் கடையும் போது கிடைத்த விஷத்தை சிவன் உண்டு உலகைக் காப்பாற்றியதும் இம்மாதம்தான். ஆகையால் ம்ருத்யுஞ்சய ஹோமம் செய்ய இம்மாதம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இந்திரனால் பெருமழை உருவான போது கோகுலத்தில் உள்ள அனைவரையும் காப்பாற்ற கோவர்த்தன கிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்துக் காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில்தான்.

**அறிவியலின்படி மார்கழி மாதத்தில் அதிகாலை வழிபாடு**

அதிகாலையில் எழுந்து நடக்கும் போது இயற்கைக் காற்றைச் சுவாசிப்பதால் மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களும் குணமாகும் என்று முன்னோர் அறிந்து வைத்திருந்தனர். ஆதலால்தான் மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நாம சங்கீர்த்தனம் பாடி நகர் வலம் வருவதும், பெண்கள் காலையில் கோலம் இடுவது போன்றவற்றை கடைபிடித்து வந்தனர்.

அறிவியலின்படி, மார்கழி மாதத்தில் ஆக்ஸிஜன் நிறைந்த ஓசோன் படலம் பூமிக்கு மிக அருகில் அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை படர்ந்திருக்கும். ஓசோன் வாயு நுரையீரலுக்குச் சென்று புத்துணர்ச்சியை உண்டாக்கும். மார்கழி மாதக் காற்று சருமத்திற்கும், உடல் நலத்திற்கும் மிகவும் நல்லது என்பது அறிவியல் ஆராய்ச்சியிலும் தெரிய வந்துள்ளது.











**மார்கழி மாத கோலம்**

மார்கழி மாதத்தில் வாசலில் மிகப் பெரிய கோலம் இட்டு, அதில் வண்ண வண்ணப் பொடி தூவுவதும், பூசணிப் பூவினை பசும் சாணத்தில் வைப்பதும் இன்றும் வழக்கமாக பின்பற்றப்படுகின்றது. பசும் சாணம் கிருமி நாசினி ஆகும்.

அந்தக் காலத்தில் தங்கள் வீட்டில் திருமண வயதுடைய பெண் இருக்கிறாள் என்பதைத் தெரிவிக்கும் அடையாளமாகவே கோலத்தின் மீது பூசணிப்பூ வைப்பார்கள்.

அதிகாலையில் வீதியில் பஜனைக்கு வருபவர்கள், அந்த வழியாகச் செல்பவர்கள் அதனைப் புரிந்து கொண்டு, மார்கழி முடிந்ததும், தை மாதம் திருமணம் பேசி மணம் முடித்து விடுவார்கள்.

மார்கழியில் பூசணிப்பூ வைக்க, தை மாதத்தில் திருமணம் கைகூடிவரும் என்பர். மார்கழி மாதத்தில் வீட்டின் முன்பு கோலமிட்டால் மஹாலக்ஷ்மி வீடு தேடி வருவாள் என்பது நம்பிக்கை. கோலம் இடுவதால் மனதுக்கு உற்சாகமும், நினைவாற்றலும் கிடைக்கிறது. கோலம் இடும் பெண்களின் சிந்திக்கும் திறன் சிறப்பாக இருக்கும் என்றும், நல்ல மனநிலையோடு இருப்பார்கள் என்றும், உடலிலும் மிக நல்ல அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன எனவும் அறிவியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

**மார்கழி மாதச் சிறப்புகளும், விழாக்களும்**

மார்கழி மாதத்தில் அதிகாலையிலேயே ஆலய வழிபாடு தொடங்கி விடும். இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனுமத் ஜெயந்தி, பாவை நோன்பு, திருவெம்பாவை நோன்பு, படி உத்ஸவம், சஷ்டி விரதம், உத்பத்தி ஏகாதசி போன்ற விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் கடைபிடிக்கப்படுகின்றன.

திருமலையில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வைகுந்த வாயில் திறப்பு நடைபெறுவதால் பக்தர்கள் வைகுந்த வாயில் வழியாகச் சென்று தம்மைப் புனிதராக ஆக்கிக் கொள்கின்றனர். அன்றைய தினம் திருமலையப்ப ஸ்வாமி உபய நாச்சிமார்களுடன் தங்கத்திருத்தேரில் எழுந்தருளி திருமாட வீதிகளில் வீற்றிருக்கும் பக்தர்களுக்கு காட்சி தந்தருளுவார். மறுநாள் துவாதசி அன்று சக்கர ஸ்நானம் கண்டருளுவார். நாமும் ஆன்மீக மலர்ச்சிக்குச் சிறந்த மாதமாகக் கருதப்படும் இந்த மார்கழி மாதத்தில் இறைவனை மனதால் துதித்துப் போற்றுவோம்.





# திருவரங்கத்தில்

சங்க இலக்கியமாகிய சிலப்பதிகாரத்திலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களிலும் திருவரங்கம் கோயிலைப் பற்றிய தகவல்கள் அழகிய சொல்லோவிய வருணனைகளாகக் காணப்படுகின்றன. விரிந்த அலைகளோடு கூடிய மிகப் பெரிய காவிரி ஆற்றின் இடைக்குறையில் திருமகள் விரும்பி உறையும் மார்பை உடையவரும், நீலநிறம் கொண்டவரும் ஆகிய திருமால் ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் என்னும் சிறந்த பாம்பணையாகிய பள்ளியின் மீது அழகுறச் சாய்ந்து கொண்டிருக்கும் தன்மை நீலநிறமுடைய ஒரு மேகமானது பொன்மலை யினைச் சூழ்ந்து படிந்திருக்கும் பான்மையில் திகழ்கின்றது என்னும் கருத்து அமைய இளங்கோவடிகள் ***"நீலமேகம்.... திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்"*** என்று பாடியுள்ளார்.

## வைகுண்ட ஏகாதசி உத்ஸவம்

108 திவ்ய தேசங்களில் முதன்மையானதும், பூலோக வைகுந்தம் என்றும், பெரிய கோயில் என்றும் அழைக்கப்படுகிற திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில் நடைபெறும் அனைத்து உத்ஸவங்களும் சிறப்பு வாய்ந்தது ஆகும். ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருஅத்யயன உத்ஸவம் (வைகுந்த ஏகாதசி திருமொழி திருவாய்மொழித் திருநாட்கள்) முக்கியத் திருவிழா ஆகும். பகல் பத்து 10 நாட்கள், இராப்பத்து 10 நாட்கள், இயற்பா என 21 நாட்கள் நடைபெறும். இந்த உத்ஸவத்தில் பெரிய பெருமாள் மூலவர் முத்தங்கியுடன் சேவை சாதிப்பார். பகல்பத்து உத்ஸவத்தின்போது நம்பெருமாள் அர்ச்சனை மண்டபத்திலும், இராப்பத்து திருநாட்களில் திருமாமணி மண்டபத்திலும் (ஆயிரம் கால் மண்டபம்) அனைத்து ஆழ்வார்கள் ஆசாரியர்களுடன் எழுந்தருளி சேவை சாதிப்பது மிகவும் சிறப்பாகும்.

பகல்பத்து உத்ஸவத்தின்போது திருமொழி பாசுரங்களும், இராப்பத்தின் போது திருவாய்மொழி பாசுரங்களும் அபிநயங்களுடன் அரையர்களால் சேவிக்கப்படும். பகல்பத்து திருநாளில் வைகுண்ட ஏகாதசிக்கு முன்னதாக வரும் திருநாள் பகல்பத்து எனப்படும். அர்சுன மண்டபத்தில் நம்பெருமாள் வீற்றிருந்து அரையர் சேவை கேட்கும்போது கம்சவதம், வாமனாவதாரம், அம்ருத மதனம் முத்துக்குறி, இராவண வதம் முதலிய சரித்திரங்களை அரையர் சுவாமிகள் பாட்டாகவும், அபினயமாகவும் தருவதைக் காணவும், கேட்கவும் ஒரு பிறவி போதாது.

திருவரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியைத் திருவத்யயன உத்ஸவம் என்றும், தமிழர் திருநாள் என்றும் போற்றுகிறார்கள். அரங்கனுக்கு நித்திய கல்யாணம் பச்சைத் தோரணம் என்று எல்லோரும் மகிழ்வது உண்மையே. ஆயினும் வைகுண்ட ஏகாதசியை நம் பெரியோர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களை பிரத்யேகமாக அரையர் சேவை மூலம் கேட்டு மகிழும் திருவிழா என்பதால் அதற்கு ஏற்ற மார்கழி மாதத்தில் இவ்விழா தொடரும். இதன் உச்சகட்டம் இருபது நாட்கள் விழாவில் 11ஆம் நாள் ஏகாதசியன்று நம்பெருமாள் இரத்னாங்கி அணிந்து அவரின் நான்குவித நடையோடும் கதிகளை சிம்மகதி, கஜகதி, வியாகரகதி, விருஷபகதி கண்டு மோகித்து அரங்கன் நடையழகு என்ற சொல் ஏற்பட்டதாம்.

ஏகாதசியன்று விடியற்காலையில் கம்பீரமாகச் சிங்கம் வெளியே வருவது போல் அழகிய மணவாளன் என்கின்ற நம்பெருமாள் கருவறையிலிருந்து வெளியே வருவார். துள்ளலான நடை. ஆண்டாளின் மார்கழி மாதம் அல்லவா? மேற்குப் பிரகாரத்தில் ஒய்யார நடை தோளுக்கினியானில் நம்பெருமாள் வரும்போது வாரைகளின் இரு குமிழிகளை அடித்துக் கொண்டு ஸ்தானிகர் நடுவில் திருவாராதனம் செய்யும் பட்டர் வர, ஸ்ரீபாதம் தாங்கிகள் ஒய்யார நடையை நடத்துவார்கள். இந்நாளிலிருந்து இருபதாம் நாள் வரை திருமங்கையாழ்வார் தொடங்கி வைத்த திருவாய்மொழித் திருநாள் நடைபெறுகிறது.

நம்பெருமாள் மேற்குப் புறம் படிக்கட்டுகளில் இறங்கி, வடமேற்கு மூலையில் யாகசாலைக்கு வடக்கு மூலையில் அவரது படைத்தளபதியான சேனை முதலியார் சன்னதியைக் கடைக்கண்ணால் பார்த்தவாறு கண்ணன் கோயில் எதிரே உள்ள கண்ணாடி முன்பாக சேவை தருவார். பக்தர்கட்குப் பரம போக்கியமாக இருக்கும் அரங்கனையும், தங்களையும் ஒன்று சேர நிற்கும் நிலையில் பார்க்க முடிகிறது.

அடுத்து பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அரங்கனை வேங்கடவனாகக் கண்ட இடம். வண்ண சித்திரத்தில் ஸ்ரீநிவாசனை வணங்கி அரங்கனைத் தொடர்ந்து நாழிகேட்டான் வாசலைத் தாண்டி குலசேகரன் திருச்சுற்றினை அடைகிறோம். எதிரே காணும் மிகப் பெரிய கொடிமரம் பலி பீடம் கம்பத்தின் உச்சியில் தரிசனம் தரும் கருடனைச் சேவித்து அணியரங்கன் திருமுற்றம் தாண்டி துரைபிரதக்ஷிணம் வழியே செல்கிறோம். இராப்பத்து எனப்படும் திருவாய்மொழித் திருநாள் பத்துத் தினங்களும் இங்கே மண்டபத்தில் இருந்தவாறு நம்பெருமாள் வேத விண்ணப்பம் கேட்பார். இம்மண்டபத்தின் கீழே விரஜாநதி ஓடுகிறது. கல்லால் ஆன தூணெல்லாம் சொல்கிறது அற்புதமான கவி, தசாவதாரம், விபீக்ஷணன் ரங்க விமானத்தை எடுத்துக் கொண்டு வருவது போன்ற காட்சிகள். வேத விண்ணப்பத்திற்கு பிறகு அடியார்கட்கு தீர்த்தம், வடை பருப்பு வழங்குவது நடந்த பின் பரமபத வாசல் திறந்திட ஆணை பிறக்கிறது. பரமபத வாசல் திறந்தவுடன் நம்பெருமாள் வெளியே எழுந்தருளுகிறார்.

பக்தகோடிகள் புடை சூழ, இரத்னாங்கி சல்லாப் போர்வை வழியே பளீரிட கிளி மாலை மெல்ல அசைய நம்பெருமாள் கம்பீரமாக ஆயிரங்கால் மண்டபம் சேர்ந்து அங்கே திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளி சேவை தருகிறார். நேர் எதிரே காணும் கலை வண்ணம் மிகுந்த சேஷராயர் மண்டபத்தில் உள்ள தன்னை அயோத்தியில் பூஜித்த சூரிய வம்சத்து தோன்றலான, ஸ்ரீராமனுக்கு சேவை தந்தவாறு வெகுநேரம் வரை இருந்து அரையர் சேவை ஏற்று பிறகு கருவறைக்குத் திரும்புவார். இராப்பத்து எனப்படும் இந்நாட்களில் திருக்கைத்தல சேவை, பராங்குசநாயகியான திருக்கோலத்தில் உள்ள நம்மாழ்வார் மோட்சம் போன்ற தெய்வீகக் காட்சிகள் நிகழும். பூலோக வைகுண்டம் என்னும் திருவரங்கம், விஷ்ணு கோயில்களில் அனைத்திலுமே வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்படுகிறது.

**– திரு. வீ. சீனிவாசன், இறவாங்குடி,**
**98428 12243.**

**ஏ கா த சி உ த் ஸ வ ம்**











# வேத ஜோதிடத்தில் 12 வீடுகள்

- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
திருவல்லிக்கேணி, 9444392595

*சென்ற மாத இதழின் தொடர்ச்சி...*

### 10வது வீடு

10 வது வீடு கர்ம பாவம் என்று அழைக்கப்படும். நீங்கள் செய்யும் வேலை, தொழில், கௌரவம், நற்பெயர் போன்றவற்றைக் கையாள்கிறது. இந்த வீட்டில் உள்ள கிரக நிலைகளால் உங்கள் தொழில் பகுதி வரையறுக்கப்படுகிறது. இந்த வீடு மகர சக்தியுடன் ஒத்துப்போகிறது மற்றும் சனியால் ஆளப்படுகிறது. உங்கள் ஜாதகத்தில் சனி மற்ற கிரகங்களுடன் இணக்கமாக இருந்தால், இந்த கிரகம் மிகவும் சக்தி வாய்ந்த கூட்டாளியாக மாறும்.

முழங்கால், முழங்கால் எலும்புகள், மூட்டுகள் ஆகியவை இந்த வீட்டின் ஆளுகையின் வெவ்வேறு உடல் பாகங்கள். வேத ஜோதிட சாஸ்திரத்தில் 10வது வீட்டின் பலவீனம், முழங்கால்கள் உடைதல், மூட்டு வீக்கம், உடலில் பலவீனம் மற்றும் தோல் ஒவ்வாமை போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்தலாம்.

### 11வது வீடு

வேத ஜோதிடத்தில் லாப பாவம் என்பது செழிப்பின் வீடு, செல்வம், வருமானம், பெயர், புகழ் மற்றும் பணத்தின் ஆதாயத்தின் வலுவான குறியீடாகும். மேலும் உங்களுக்கு லாபம் என்ன என்பதை தீர்மானிப்பதில் பங்கு வகிக்கிறது. வேத ஜோதிடத்தில் 11வது வீடு கும்பத்துடன் தொடர்புடையது மற்றும் சூரியன் இந்த வீட்டின் இயற்கை அடையாளமாகும். கணுக்கால், வலது கால்,தாடை எலும்பு, இடது காது மற்றும் இடது கை ஆகியவை இந்த வீட்டை நிர்வகிக்கும் உடல் பாகங்கள். பூர்வீக ஜாதகத்தில் பலவீனமான 11ஆம் வீட்டைக் கொண்ட ஒரு பூர்வீகம். குறைந்த இரத்த உற்பத்தி, கால்களில் வலி, உடலின் கீழ் பகுதியில் எலும்பு முறிவு போன்ற பிரச்சனைகள் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

### 12வது வீடு

கடைசி வீடாக இருப்பதால், வேத ஜோதிடத்தில் 12வது வீடு உங்கள் வாழ்க்கை சுழற்சியின் முடிவையும் உங்கள் ஆன்மீக பயணங்களின் தொடக்கத்தையும் குறிக்கிறது. இது சுயநினைவின்மை, சுய அழித்தல் மற்றும் சிறைச்சாலையின் வீடு என்றும் அழைக்கப்படுகிறது. பலவீனமான 12ஆம் வீடு, அவர்களின் பங்குதாரர், பெற்றோர், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரைப் பிரிவது போன்ற நபர்களிடமிருந்து பூர்வீகப் பற்றின்மையைக் கொடுக்கலாம்.

பற்றின்மை மரணத்தின் வடிவத்திலும் இருக்கலாம். பெரும்பாலும் இது அருவமான விஷயங்களை நிர்வகிக்கிறது. உள்ளுணர்வு, கனவுகள், ரகசியங்கள் மற்றும் உணர்ச்சிகள் போன்ற விஷயங்கள். ஏனெனில் இந்த வீடு மீனத்தின் ஆற்றலுடன் ஒத்துப்போகிறது மற்றும் நெப்டியூன் கிரகத்தால் ஆளப்படுகிறது. பன்னிரண்டாம் வீடு இடது கண், பாதங்கள் மற்றும் நிணநீர் மண்டலம் போன்ற உடல் உறுப்புகளை கவனித்துக் கொள்கிறது.

*முற்றும்....*

"அவதாரம் ஒன்று. ஆனந்தம் பலருக்கு" என்பதை இவ்வுலகில் மெய்ப்பித்துக் காட்டியதே ஸ்ரீராம பிரானின் திருவவதாரமாகும்.

புத்திரகாமேஷ்டி யாகத்தில் கிடைத்த பாயஸப் பிரசாதத்தின் மகிமையால் தசரதரின் பட்டமகிஷி யாகிய கௌசலைக்கு மட்டுமின்றி, இளையராணிகளாகிய தங்களுக்கும் புத்திர பாக்கியம் கிடைத்ததென்று சுமித்திரையும், கைகேயியும் சந்தோஷம் கொண்டனர்.

தங்களை ஆளப்போகின்ற சக்கர வர்த்தி பிறந்தார் என்று கோசல தேசத்தின் குடிமக்கள் அனைவரும் மகிழ்ந்தனர். என்னிடத்தில் பிறந்து வளரப்போகின்ற மாதர்குல மாணிக்கத்தை மணக்க இருக்கின்ற மணாளன் பிறந்தான் என்று மிதிலா நகரம் மகிழ்ந்தது.

இத்தனைக்கும் மேலாக, அரக்கர்களின் கொடுமையிலிருந்து விரைவில் நமக்கு மீட்சி கிடைக்கப்போகிறதென்று தேவர்களும் முனிவர்களும் பேரானந்தம் கொண்டனர்.

இப்படியாக அனைவருக்கும் ஆனந்தமளிக்கும் அவதார புருஷராகிய ஸ்ரீராமபிரான் மன்னுபுகழ் கௌசலை தன் மணிவயிற்றில் கர்ப்ப வாசம் செய்து புனிதமான புனர்வசு நட்சத்திரமும், நன்மைகள் புரியும் நவமி திதியும் கூடிய ஒரு சுபயோக சுபதினத்தில் புண்ணியம் பொருந்திய அயோத்தி மாநகரில் வந்து அவதரித்தார்.

அயோத்தியில் அவர் வாசம் புரிந்த காலகட்டங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

"அவதரித்தது முதல் விசுவாமித்திரருடன் கிளம்பிச் சென்றது வரை; விவாஹம் முடிந்து சீதாராமனாக அயோத்திக்கு வந்தது முதல் கைகேயியின் உத்தரவுப்படி வனவாசம் கிளம்பியது வரை; இலங்கையர் கோனை மாய்த்து விஜயராமனாக அயோத்திக்குத் திரும்பி வந்ததிலிருந்து அவதார காரியம் முடிந்து வைகுண்டத்திற்குக் கிளம்பிச் சென்றது வரை..." என மூன்று பகுதிகளிலும் ஸ்ரீராமபிரான் தம்மைச் சேர்ந்தவர்கள் அனைவரின் மனங்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துபவராகவே இருந்தார்.



# அயோத்தி என்னும் அணி நகரத்தின் ஜோதி

– திரு.எஸ்.ஸ்ரீதுரை
காஞ்சிபுரம்,
9486139685

தசரத மகாராஜாவிற்கு முனிவர்கள் கடன், தேவர்கள் கடன், பித்ருக்கள் கடன் என்று மூவகைக் கடன்கள் இருந்தன. வேதங்களைக் கற்றுத் தெளிந்த தன் மூலம் முனிவர்களின் கடனையும், தேவர்க ளுக்கு உதவியாகப் போரிட்டு அசுரர்களை வென்றதன் மூலம் தேவர்களின் கடனையும் அவர் எளிதாக அடைத்து விட்டார்.

ஆனால், நீண்ட காலமாகப் புத்திரப்பேறு இல்லாத காரணத்தால் தம்முடைய பித்ருக்க ளுக்கான கடனைத் தம்மால் அடைக்க முடியாமல் போய் விடுமோ என்று அஞ்சிய தசரதருக்குத் திருமகனாக இப்பூவுலகில் வந்து அவதரித்ததன் மூலம் அவருடைய மூன்றாவது கடனை ஸ்ரீராம பிரானே அடைத்தார். ஸ்ரீவேதாந்த தேசிகர் தாம் இயற்றியருளிய மஹாவீரவைபவம் என்னும் ரகுவீர கத்யத்தில் விளக்குகின்றார்.



## ஸ்ரீராம ஜென்ம பூமி அடிக்கல் நாட்டு விழாவின் போது

புண்ணியமான சரயூ நதி தீரத்தில் அமைந்து உள்ள அயோத்தி மாநகரில் ஸ்ரீராமபிரான் அவதரித்தருளிய ஸ்ரீராமஜன்ம பூமியில் திருக்கோயில் எழுப்புவதற்காக நாடெங்கிலும் உள்ள ஸ்ரீராமபக்தர்களிடமிருந்து "ஸ்ரீராமா" என்கிற புனிதமான திருநாமம் பொறிக்கப்பட்ட 2,75,000 செங்கற்கள் பெறப்பட்டன.

அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு செங்கற்கள் அஸ்திவாரம் அமைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வைதீக முறைப்படி மூன்று நாட்கள் நடைபெற்ற பூமி பூஜையின் முத்தாய்ப்பாக, 05-08-2020 அன்று நம் பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களால் ஸ்ரீராமஜன்ம பூமி திருக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மூன்று வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற திருக்கோயில் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று விரைவில் குடமுழுக்கு விழா நடைபெற உள்ளது.

இது மட்டுமல்ல. ஸ்ரீராமபிரான் "பூர்வபாஷி", "ம்ருதுபாஷி" என்ற இரண்டு வடமொழிச் சொற் களுக்கு உதாரணமாகத் திகழ்ந்தார். தாம் சக்கர வர்த்தித் திருமகன் என்பதால் பிறர் தம்மிடம் வந்து முதலில் பேச வேண்டும் என்று நினைக்காமல், தம்மை விடத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களிடமும் தாமே வலியச் சென்று அன்புடன் பேசுவார். அவ்வாறு அவர் பேசும் வார்த்தைகளும் மென்மையான செவிக்கினிய வார்த்தைகளாக இருக்குமாம்.

மேற்கண்ட நற்குணத்தை ஸ்ரீராமபிரான் தம்மு டைய அவதார காலம் முழுவதிலும் கடைபிடித்து வந்ததை, ***"ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்று அவர்க்கு இன்னருள் சுரந்து"*** என்று தொடங்கும் தம்முடைய பாசுரத்தில் திருமங்கையாழ்வார் புகழ்ந்து பாடியுள்ளார்.

தம்முடைய தந்தையார் தசரதர், தாய் கௌசல்யை, சிறிய தாயார்களான சுமித்திரை, கைகேயி ஆகியோரிடமும், குலகுருவாகிய வசிஷ்ட ரிடமும் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்ளும் ஸ்ரீராமபிரான் நாள்தோறும் அவர்களுடைய திருவடி களில் விழுந்து வணங்கி ஆசி பெறுவதை வழக்க மாகக் கொண்டிருந்தார். தம்முடைய தம்பிகளாகிய லட்சுமணன், பரதன், சத்துருக்னன் ஆகிய மூவரிடமும் அளவு கடந்த பாசத்தைக் காட்டினார்.

"மகாராஜா தசரதர் உன்னை வனவாசம் செல்லும்படிப் பணித்துள்ளார். அத்துடன் என்னு டைய மகனாகிய பரதனுக்கு யுவராஜபட்டாபிஷேகம் செய்யவும் அவர் நிச்சயித்துள்ளார்" என்று சிறிய தாயாராகிய கைகேயி கூறியதும்...

***"மன்னவன் பணி அன்றாகின் நும்பணி மறுப் பெனோ? என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?"***

என்று பதிலுரைத்தார் ஸ்ரீராமபிரான்.

"தாயே தகப்பனார் தசரத மகாராஜாவின் கட்டளை என்று கூறினால்தான் நான் ஏற்றுக் கொள்வேன் என்று நினைத்தீர்களோ? தங்களுடைய கட்டளை இது என்றால் அதனை மறுக்கவா போகிறேன்? மேலும், தங்கள் திருவயிற்றில் பிறந்த என்னுடைய தம்பியாகிய பரதனுக்கு இந்தக் கோசல ராஜ்யம் கிடைத்தால் அது எனக்கே கிடைத்ததற்குச் சமம் இல்லையா?" என்ற ஸ்ரீராமபிரானுடைய பதிலின் மூலம் அவர் பெரியோர்களிடத்தில் வைத்திருந்த மரியாதையையும், உடன் பிறந்தவர்களிடத்தில் கொண்டிருந்த பாசத்தையும் நாம் புரிந்து கொள்கின்றோம்.

இலங்கையை வெற்றி கொண்டு ஸ்ரீசீதா பிராட்டியுடன் அயோத்திக்கு மீண்டும் வந்து, பட்டாபிஷேகம் செய்து கொண்டு, பத்தாயிரம் வருட காலம் ஸ்ரீராமபிரான் அரசாண்ட காலத்தில் தர்மநெறி சிறந்து விளங்கியது.

இதனை, *"த்ரேதா யுக ப்ரவர்த்தித கார்த்தயுக வ்ருத்தாந்த!"* என்று குறிப்பிடுகின்றார் ஸ்ரீவேதாந்த தேசிகர்.


கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற நான்கு யுகங்களையும் சதுர்யுகம் என்று வடமொழியில் அழைப்பர். இவற்றுள் முதல் யுகமாகிய கிருதயுகத்தில் முழு அளவு தர்மம் கடைபிடிக்கப்படும். அதற்கு அடுத்த யுகமான திரேதாயுகத்தில் அவ்வாறு தருமநெறிப்படி நடப்பது குறையத் தொடங்கும்.

ஆனால், திரேதாயுக நாயகனாக அவதரித்து அயோத்தியில் ஆட்சி புரிந்த ஸ்ரீராமபிரானுடைய ஆட்சியில் தரும நெறிகள் குறைவேதும் இல்லாமல் கடைபிடிக்கப்பட்டன. எனவே ஸ்ரீராமபிரானின் ஆட்சிக் காலமாகிய திரேதாயுகத்தில் கிருதயுகத்தின் உயர்ந்த தர்மநெறிகள் நிலைநாட்டப்பட்டனவாம்.

எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் புண்ணிய பூமியாகிய நமது பாரத தேசத்தில் அளவிடமுடியாத மகிமைகள் பொருந்திய சரயூ நதியின் தீரத்தில் அமைந்துள்ள அயோத்தியென்னும் புனிதமான நகரில் அவதரித்து, அந்நகரத்து மக்களில் ஒருவராக வாழ்ந்ததன் மூலம் நாமெல்லாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.



அடிக்கல் நாட்டுவதற்கு முன்னதாக, அதற்குரிய தெய்வீக அனுமதியைப் பெறும் பொருட்டு அயோத்தியில் உள்ள அனுமன் கர்ஹி திருக்கோயிலில் பிரதமர் வழிபட்டார். 161 அடி உயர்ந்த கோபுரம், பிரம்மாண்டமான அனுமன் சிலை, ஸ்ரீமத்ராமாயண நூல் நிலையம், வால்மீகி ஆராய்ச்சி நிலையம், இவற்றுடன் ஸ்ரீராமபிரான் அவதரித்த கருவறையையும் சேர்த்து அமைந்த ஸ்ரீராம ஜன்ம பூமி திருக்கோயில் இவ்வுலகில் ஸ்ரீராம நாமமும், ஸ்ரீமத்ராமாயணமும் உள்ளளவும் நீடித்த பகழ் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.



அப்புனிதமான அயோத்தி நன்நகரில் ஸ்ரீராமபிரான் அவதரித்த "ஸ்ரீராமஜன்ம பூமி" என்னும் பவித்திரமான தலத்தில் எழுப்பப்பட்டு வரும் கலை நயம் மிகுந்த பிரம்மாண்டமான ஆலயத்தின் திறப்பு விழா மிக விரைவில் நடைபெற இருக்கிறது. ஸ்ரீராமபிரானுடைய புகழ் இந்தப் பூவுலகில் நிலைத்து இருக்கும் வரையில் ஸ்ரீராமஜன்ம பூமியும் அங்கு வானளாவ நிறுவப்பட்டுக் கொண்டிருக்கும் திருக்கோயிலும் புகழ் பெற்று விளங்கும் என்பதில் ஒரு சிறிதும் நமக்கு ஐயமில்லை.

நடையில் நின்றுயர் நாயகனாகிய ஸ்ரீராமபிரானுடைய ஸ்ரீராமஜன்ம பூமித் திருக்கோயிலுக்கு நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வில் ஒருமுறையேனும் சென்று வணங்கி வழிபட்டு உய்வு பெறுவோமாக!

தொடர்ந்து அலசுவோம்...

# திருப்பாவையும் திருவெம்பாவையும்

முனைவர். ச. செந்திலாண்டவன்,
சென்னை, 94445 82856.

மார்கழி மாதத்தை அதிகக் குளிரும், அதிக வெயிலும் இல்லாத சாத்வீகமான மாதம் என்கிறார் வியாக்யான சக்ரவர்த்தி பெரிய வாச்சான் பிள்ளை. இம்மாதம் கடவுள் தொண்டு செய்வதற்கான சிறந்த மாதம் என்றும் கூறுவர்.

## திருப்பாவை

ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த விஷ்ணு சித்தர் என்ற பெரியாழ்வாரின் திருமகளாக வளர்ந்தவள் ஆண்டாள் நாச்சியார். இவள், "திருப்பாவைப் பல்பதியம் திருவரங்க நாதனுக்கு இன்னிசையால் பாடிக் கொடுத்தாள். பூமாலையும் சூடிக் கொடுத்தாள்" என்று சிறப்பிப்பர். திருப்பாவை 30 பாசுரங்கள் உடைய செந்தமிழ்ச் சிறப்போவியம்.

## திருவெம்பாவை

மாணிக்கவாசகர், திருவாதவூர் என்கிற தெய்வத் திருத்தலத்தில் தோன்றியவர். தென்பாண்டி நாட்டின் அமைச்சராகப் பணியாற்றி, கலைஞானக் கல்வியும் தவநெறி ஒழுக்கமும் கொண்டு, பாண்டிய மன்னனால் "தென்னவன் பிரமராயன்" என்னும் சிறப்புப் பட்டமும் பெற்றவர். மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் தங்கி அண்ணாமலையாரை வணங்கி வழிபாடு ஆற்றிய போது இயற்றியதே திருவெம்பாவை என்னும் சிவனருட் செல்வம். மாணிக்கவாசகரும் ஆண்டாள் நாச்சியாரும், இறையொளி தந்த பக்திப் பேரொளியில் தெள்ளத் தெளிவாகச் செந்தமிழ்ப் பாடல்களாகப் பாவைப் பாடல்கள் இயற்றினர்.

இரண்டு பாவைப் பாடல்களிலும், கன்னிப் பெண்கள், தம் வயதொத்த பிற கன்னிப் பெண்களையும், சிறுமியர்களையும், அதிகாலையில் வைகறை வெளிச்சத்தில் நீர் நிலைகளில் நீராட அழைத்துப் பாவை நோன்பு இயற்ற வேண்டும் என்று கூறி இறையருள் பெறுவதாகப் பேசப்படுகின்றது.

## திருப்பாவை உட்பொருள்

தங்களின் வாழ்க்கையை, சிறப்பான பக்தி நெறியில் நோன்பு இயற்றி, பரம்பொருளாகிய திருமாலிடம், அவர் இயற்றிய வெற்றி வீரச் செயல்களையெல்லாம் கூறி விவரித்து, கன்னிப் பெண்களாகிய எங்களுக்கு உன்னைப் போலவே கணவன் அமைய வேண்டும் என்றும், உலகம் நிறை செல்வம் பெற்றதாக இருக்க வேண்டும் என்றும் வேண்டுகிறாள்.

மேலும்,தெய்வமாகிய உனக்கே நாங்கள் எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் தொண்டுகள் செய்வோம் என்றும் வேண்டுவதாக அமைந்து சிறப்புச் செய்கிறது திருப்பாவை. இத்திருப்பாவை யில் வைணவ பக்தி மணம் நம் நாடி நரம்பெல்லாம் ஊடுருவி நிற்கின்றது.



### திருவெம்பாவை உட்பொருள்

வாழ்க்கையில், இறைவழிபாட்டில் மனஞ் செலுத்தும் நோன்பென்றும், வைகறை வழிபாட்டு நீராடல் என்றும் திருவெம்பாவை விரித்துப் பாடுகின்றது. எங்கும் எதிலும் அம்மையும் அப்பனும் ஆக இருக்கின்ற தன்மையை உணர வைத்து – சிவசக்தி ஐக்கியத்தைத் தொடர் சங்கிலி ஆக்குகின்றது. திருவாசகத்தின் செந்தமிழ்த் தேன் துளியில் சைவ நெறி நறுமணமே பாடல் தோறும் வீசுகின்றது.

### திருப்பாவையும் திருவெம்பாவையும் காட்டும் பக்தி மழைக்காட்சி

சிறியோர்கள் முதல் பெரியோர்கள் வரை எல்லோருக்குமே மழையில் நனைதலும், மழையை ரசித்துப் பார்த்தலும், மழைச்சாரலில் உடல் சிலிர்ப்பதும், எந்நாளும் நாம் காணும் இன்பக் காட்சியாகும்.

வானம் தருகின்ற மழைதான், மண்ணுலகத்தை வாழ வைக்கின்றது. அளவான மழை தரும் இன்ப மும், அதிக அளவில் கொட்டும் பெருமழை அச்சமும் தருவதை நாம் அறிவோம்.


திருப்பாவையும், திருவெம்பாவையும், மழை எப்படி உருவாகிறது என்ற அறிவியலையும் உள்ளடக்கி, அதில் பக்தி மணத்தையும் உட்புகுத்திச் செந்தமிழ்ச் சிறப்போவியமாகத் தருகின்றன. அப்பாடல்களைப் படித்து உணர்கின்ற போது ஏற்படும் பக்திச் சிலிர்ப்பு, தானாக நமக்குள் உணர வைக்கும் உள்ளார்ந்த உணர்ச்சித் தொகுப்பா கின்றன.

### தேன்துளி

மேகமே! முன்னதாக எதிரே உள்ள, பெருங் கடலின் உவர் நீரைக் குறைத்து, மேலெழுந்து, எம்பெருமாட்டி, உமா தேவியார் போல விளங்கி, எம்மையெல்லாம் அடிமைகளாக உடையவளது சிற்றிடையில், அணிந்துள்ள ஒட்டியாணம், பேரொளி வீசுவது போல மின்னல் மின்னி, எம்பெருமாட்டியின் திருவடி மேலணிந்த, பொன்னாற் செய்யப்பட்ட சிலம்பு போல, இடிஇடித்து, அழகிய புருவம் போல, வானவில்லை வளைத்து, நம்மை ஆளுடையாள், தன்னை ஒரு போதும் விட்டு நீங்காத இறை பக்தர் களுக்கு, முனைந்து வந்து, சிவனருளைப் பொழிவது போல, நீயும் நினைத்து, நமக்கு முன்னதாக மழையைச் சொரிவாய், எம்பாவாய்! இதனை ஏற்றருள்க! என்பது திருவெம்பாவையில் வரும் பாடல்!

*"முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்*
*என்னத் திகழ்ந்தெம்மை ஆளுமையா*
*ளிட்டையின்*
*பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்*
*என்னச் சிலைகுவலி நந்தம்மை ஆளுடையாள்*
*தன்னிற் பிதிவிலா எங்கோமான் அன்பர்க்கு*
*முன்னி அவள் நமக்கு முன் கோமான்*
*அன்பர்க்கு*
*முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும்*
*இன்னருளே*
*என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!"*

ஆண்டாள் அருளிய திருப்பாவையோ, முகில் நிறத்தில் முகில் வண்ணன் (திருமால்) திருமேனி அழகைக் கூறி, அந்த பத்மநாபன் கையில் இருக்கும்



சுழற் சக்கரம் போல் மின்னல் அடித்து, வலம்புரிச் சங்கின் பேரொலிபோல் இடித்து முழங்கி பெய்யும் மழைச் சரங்கள் எல்லாம் அந்தச் சாரங்கபாணியின் அம்புமழை போல அல்லவா இருக்கின்றன என்று வர்ணித்து, இந்த உலக மக்கள் வாழ, மழையே நீ திங்கள் மும்மாரி பெய்க! நாங்களும் மார்கழி நோன்பிற்கு நீராடி மகிழ்வோம்'' என்று கன்னிப் பெண்கள் பாடுவதாகக் காட்டுகிறது.

*''ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்*
*ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி*
*ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்*
*பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையில்*
*ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து*
*தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்*
*வாழ, உலகினில் பெய்திடாய்! நாங்களும்*
*மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்''*

திருவெம்பாவையின் பக்தி ஞானப்பரப்பில் பரம்பொருள். சிவபெருமானின் பெருமைகள் எல்லாம் பேசப்படுகின்றன. அண்ணாமலையான் ஆதியும் அந்தமும் அரும்பெரும் சோதி யாக நின்று, எவரும் காணாப் பெருமையை உடையவன் என்றும்,

*''முன்னைப் பழம்பொருட்டு*
*முன்னைப் பழம்பொருளே...*
*பின்னைப் புதுமைக்கும்*
*போர்த்தும் அப்பெற்றியனே''*

என்றும் பாடல்கள் தோறும் உயர்த்திப் பேசுகின்றனர் கன்னிப் பெண்கள்.


**கோதை நாச்சியார், திருவில்லிபுத்தூர்.**

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 89க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சூ | ரி | ய | ப | க | வா | ன் | | | ன் | ய | 2 ம |
| ர் | ட | ஷ் | 3 சி | 4 வ | 5 ரே | வ | தி | 6 ச | ர | | கா |
| யா | | | வ | | | 7 மூ | | ப | வ | | ல |
| ரி | | | த | | | ல | | ரி | ஸ் | | ட் |
| 8 சா | ந் | தை | னு | | | ம் | | | னீ | ர் | சு |
| ச் | ன் | | சு | | ன் | வா | த் | ர | 9 ச | ம | மி |
| ரா | க | | 10 க | ம் | ச | ன் | ண | ர் | 11 க | ரா | |
| க் | ங் | 12 ஸ்ரீ | ஹ | ய | க் | கி | ரீ | வ | ர் | சு | |
| 13 சு | ளி | வி | தே | யா | 14 சா | 15 அ | தி | வ | ஸ் | ர | 16 ச |
| ம | 17 கா | ண் | டீ | ப | ம் | னு | | 18 து | வா | 19 ப | ர |
| | ப | ஸ் | க | ர | 20 பி | சு | னு | த | ணு | ஷ் | 21 வி |
| 22 து | ரோ | ணா | ச் | சா | ரி | யா | ர் | | ணி | கி | 23 ரோ |

## முடிவுரை :

பக்தித் தமிழ் இலக்கிய வரலாற்றில், மார்கழி மாதத்தில் பாடக்கூடிய திருப்பாவையும் திருவெம்பாவையும் சிறப்பிடம் பெறுகின்றன.

மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை சைவ மணங்கமழும் பெட்டகம். ஸ்ரீஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவை, வைணவ மணங் கமழும் வான் அமுதம். இறைப் பேருண் மையை இறைவனது திருவிளையாடல் கள் வழியாகக் காட்டும் காலக்கண்ணாடி களே – பாவைப் பாடல்கள் என்றால் மிகையில்லை.

ஸ்ரீஆண்டாள் திருவடிகளே போற்றி! ஸ்ரீமாணிக்கவாசகர் திருவடிகளே போற்றி! போற்றி!!





# சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

உலகிலேயே மிகப் பழமையான நாகரிகங்களில் தலை சிறந்த இந்திய நாகரிகத்தை பறைசாற்றுபவை கட்டுமானங்களும், கலைகளுமேயாகும். மொழி இல்லாமல் கதை பல கதைக்கும் சிலைகள் வழி ஆன்மீகம் என்பது வரலாற்று சுவடுகளின் எதார்த்தங்களை எடுத்துரைக்கும் திருக்காட்சிகளின் சாட்சிகள் ஆகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வேட்டைக்கு செல்லும்போது தாங்கள் கண்ட காட்சிகளையும், மிருகங்களையும், வழித்தடத்தினையும், தங்களுடைய தலைமைக்கு அடையாளம் காட்ட குகை பாறைகளில் சிறிய கல் கொண்டு கீரல் ஓவியமாக வரைந்து காட்டியுள்ளார்கள்.

பின்னாளில் பல பரிமாணங்கள் கண்ட கல்வெட்டு எழுத்துக்கள், பாறை ஓவியங்கள், சிலை வடிவங்கள், சிற்பங்கள் எனும் கலைகளுக்கு முன்னோடி அந்த பாறை கீரல்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

நமது தாய்திருநாட்டை மன்னர்கள் பலர் ஆலயங்கள் மற்றும் குடவரை ஆலயங்கள் எனப் பல அமைத்து, அதில் ஆன்மீகம் ஒளிர தமிழ் கலைகளுடன் காந்தாரச் சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் வாயிலாக எளிய முறையில் சனாதன கருத்துக்களையும், இதிகாச, பதினெண் புராணங்களையும், அதில் வரும் கதாபாத்திரங்களையும், தங்களின் அரசாட்சியின் சிறப்பினையும் பதிவு செய்து உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில், திருப்பதியிலிருந்து திருமலை வரை நடந்துச் செல்லும் மலை வழிப்பாதைகளிலும், திருமலையிலும், ஆலயத்தின் உள்ளேயும், வெளியேயும் நம் சிந்தை மயக்கும் பலவிதமான கற் சிற்பங்களை நாம் காணலாம்.






- குடந்தை
ப. சரவணன்,
9444392595

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

சேஷாசலத்தில் யாகம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் விஷ்ணு பக்தர்களாக மாறி வந்திருந்த ஸ்ரீஹரியிடம் தங்களோடு அமர்ந்துள்ள அந்தத் தாய் யார்? என்று கேட்டனர்.

அதற்கு ஸ்ரீஹரி என் பக்கத்தில் அமர்ந்துள்ளவளைப் பற்றி கேட்கிறீர்களா? "தனியாக இருந்து வந்த என்னை மோகினி போல இவள் பிடித்துக் கொண்டாள். நானும் அவளை என்னுடன் சேர்த்துக் கொண்டு இருவருமாகச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தோம். அப்பொழுது உங்கள் வேள்விச் சாலை தெரிந்தது. உங்கள் செயலை அருகில் இருந்து பார்க்க வேண்டும் என வந்தோம். உங்களிடம் ஒன்று கேட்கிறேன் தவறாக நினைக்காதீர். உங்களில் சிலர் மிகவும் அழகாகப் பாடிக் கொண்டிருக்கிறார்களே அந்தப் பாட்டு என்ன? மேலும், சிலர் தேவதைகளைப் புகழ்ந்து அழைக்கிறார்களே எதற்கு? இந்த இடம் அக்னிக் குண்டங்களால் நிறைந்திருக்கிறதே எதற்கு? இங்கு மரக்கட்டைகளால் செய்த பாத்திரங்களே தென்படுகிறதே. எல்லாம் காண்பதற்கு வித்தியாசமாகவும், வியப்பாகவும் உள்ளதே! என்று தொடர்ந்து கேள்விக் கனைகளைத் தொடுத்தார்.

அதற்குள்ளாக அக்னி குண்டம் அருகில் அமர்ந்திருந்தவர்கள். "அவிஸ்" யாகம் செய்ய வேண்டும். அந்த ஆகுதி முடிந்த பின்பு தம்பதியர்களிடம் அனைத்து விஷயங்களையும் விரிவாகப் பேசலாம் என்று கூறி அழைத்தார்கள். தவசிகளும் உடனே அக்னி குண்டம் அருகில் சென்றார்கள். வேதமந்திரங்களோடு, "அவிஸ்" யை அர்ப்பணித்துக் கொண்டிருக்க, ஸ்ரீஹரி சங்கு சக்ரபாணியாக அவர்கள் முன் தோன்றி தவசிகள் அர்ப்பணித்த "அவிர்" பாகத்தைப் பெற்றுக் கொண்டார்.

தவசீலர்களே! நீங்கள் உலக நன்மை பொருட்டு செய்யத் தொடங்கிய வேள்வியைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன் என்று கூறியவாறு ரமாதேவியோடு அங்கிருந்து மறைந்தார். இதைக் கண்ட தவசிகள் செய்வதொன்றும் அறியாமல் அப்படியே அதிசயித்து நின்றார்கள். நாம் கொடுத்து வைத்தவர்கள். புண்ணியவான்கள். வேள்விகள் யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் வேள்விக்கு உரியவரே நேரடியாகத் தோன்றி அவிர்பாகத்தைப் பெற்றுக் கொள்வது என்பது எங்கும் நடக்காத ஒன்று. மேலும். ஸ்ரீலட்சுமியையும் மஹாவிஷ்ணுவையும் நாம் கண் குளிரக் காண முடிந்தது. அவர்களோடு பேசவும் செய்தோம். இது நாம் முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் அருள் என்று மகிழ்ந்தனர். மேலும், வேள்வியை நிறுத்தாமல் தொடர்ந்து முழுமையாகச் செய்து முடித்தனர் என்று சூதர் சௌனகாதிகளுக்குக் கூற, அதன் பின் கதையைத் தொடரும்படி முனிவர்கள் கேட்டுக் கொண்டனர்.

மேற்கொண்டு சூதர், ஜாபாலி முனி கூறிய குமாரதார தீர்த்தத்தின் மகிமையைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள் என்றார். திருமலையில் புனிதமான தீர்த்தங்கள் பல உள்ளன என்று கூறினேன் அல்லவா! அவற்றில் குமாரதார தீர்த்தமும் ஒன்றாகும். குமார ஸ்வாமி குமாரதார தீர்த்தத்தோடு தொடர்புடையவரே அன்றி ஸ்வாமி புஷ்கரணியோடு தொடர்பு உடையவர் அல்ல. குமார ஸ்வாமி சில காலம் இங்குத் தவமிருந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் ஒரு முதியவர் குமரனாக மாறினாராம்.

ஒரு முதியவர் தன் மகனைத் தேடிக் கொண்டு வழி தவறி அழகிய மலைச்சிகரங்களைக் கொண்ட இந்த வேங்கடாசலத்திற்கு வந்தார். பசியினாலும் மகனைக் காணவில்லையே என்ற கவலையினாலும் நிலை தடுமாறி கீழே விழுந்தார். கீழே விழுந்ததும் தன் மகனை அழைத்தவாறே இருந்தார். அப்போது ஆபத்பாந்தனான பரந்தாமன் மாற்று வடிவில் முதியவர் முன் தோன்றி, “வயோதிகரே இந்த அடர்ந்த வனத்திற்கு ஏன் வந்தீர். இந்தத் தள்ளாத வயதிலும் வாழ வேண்டும் என ஆசைப்படுகின்றீரா?” எனக் கேட்டார்.

அம்முதியவர், ஐயா! உயிர் மீது எனக்கு ஆசையில்லை. இருந்தாலும் திருப்பிச் செலுத்த வேண்டி நன்றிக்கடன்தான் உள்ளது. அதற்கு முன் இறந்து விடுவோமோ என்கிற பயம் தொற்றி உள்ளது. அப்பொழுது ஸ்வாமி அம்முதியவரை அழைத்துக் கொண்டு வனத்தில் இருந்த தீர்த்தத்தில் நீராடும்படி கூறினார். அம்முதியவர் நீராடி நீரிலிருந்து வெளியே வரும்போது ஒரு குமரனாக மாறியிருந்தார். அப்போது ஸ்வாமியும் அவன் முன் தோன்றி அருகில் உள்ள







**பஞ்சகவ்ய தயாரிப்புகள், அகர்பத்திகள், ஸ்வாமி சித்திரப்படங்கள்**

வேத கலாச்சாரத்தில் பசுவிற்கென்று தனிச்சிறப்புண்டு. பசு மானிடர்களுக்கு அளிக்கும் சாணம், கோமியம், பால், நெய், தயிர் முதலானவை விலை மதிப்பற்ற பஞ்ச கவ்யங்களாகச் சிறப்பு பெற்றுள்ளன. இப்பஞ்ச கவ்யத்தின் வாயிலாக தி.தி.தே. பல வகையான ஆயுர்வேதப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. **தூபம், தன்சிகா பற்பொடி, ப்ருத்வி - விபூதி, இரண்மயி, மஹி, கச்யபி, உர்விநாஜல் - ட்ராப்ஸ், நந்தினி - கோஅர்க, பூமி - மூலிகை தரை கிளினர், க்ஷம - வறட்டை , புவதி காடங்க்லாக்ஸ் மற்றும் அகர்பத்திகன், புனிதமான உலர் மலர்களால் தயாரிக்கப்படட்ட ஸ்வாமி சித்திரப்படங்கள்** போன்ற பொருட்கள் தி.தி.தே. தயாரித்து விற்பனையும் செய்து வருகின்றது. இப்பொருட்கள் கீழ்கண்ட இடங்களில் விற்பனைக்கு தயாராக உள்ளது. **திருமலையில்** ஸ்ரீவாரி லட்டு கௌண்டர் வளாகம், ஸ்ரீவாரி ஆலயம் எதிரில், லேபாக்ஷி எம்போரியம் எதிரில், அன்னப்பிரசாதக்கூடம், **திருப்பதியில்** தி.தி.தே. நிர்வாகக் கட்டிடம் எதிரில், கே.டி. சாலை, ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம், தியான மந்திரம் (ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி தேர் வீதி), ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலய வளாகம்,ஸ்ரீநிவாசம் கட்டிடத் தொகுதி, விஷ்ணு நிவாசம் கட்டிடத் தொகுதி, ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலய வளாகம், திருப்பதி இரயில் நிலையம் (கிழக்கு), **திருச்சானூரில்** ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலய வளாகம், **ஸ்ரீநிவாச மங்காபுரம்** ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம்.

ஆசிரமத்திற்குச் சென்று யாகம் செய் உன் எண்ணம் ஈடேறும் என்று கூறி மறைந்தார். தன் நன்றிக்கடனைச் செலுத்த முடியாமல் இருக்கும் வயோதிகர்கள் மூன்று மாதங்கள் மூன்று வேளையும் இத்தீர்த்தத்தில் நீராடினால் வைரம் போன்ற தேகம் பெறுவர் என வரம் அருளினார் என்று ஜாபாலி முனி கூறிய கதையை சூதர் கூறி முடித்தார்.

மேலும், வால்மீகி முனிவர் எனக்குக் கூறிய சங்கனன் எனும் அரசனின் கதையைக் கூறுகிறேன் கேளுங்கள் என்றார்.

எதிரிகளால் அரசுரிமையை இழந்த சங்கனன் எனும் அரசன் புனிதத்தலங்களுக்குச் சென்றான். இராமேஸ்வரம் சென்று ராமசேதுவில் நீராடினான். அங்கிருந்து பல புனிதத் தலங்களை தரிசித்து, புண்ணியத் தீர்த்தங்களில் நீராடியபடி திருச்சானூரை வந்து அடைந்தான். அங்கே சுவர்ண முகி நதியிலும், நதியின் அருகே இருந்த பத்ம சரோவர திருக்குளத்திலும் நீராடினான். எனினும் அவனின் மனக் கவலை மட்டும் தீரவில்லை. எதிரிகளால் அரசுரிமையை இழந்தேன். நாடு இழந்தேன். தனியாக நாட்டை விடுத்து வெளி ஏறினான். உடுத்த போதிய உடை இல்லை. அரசு சுக போகங்களை அனுபவித்த எனக்கு ஏன் இந்தத் துன்பம் என வருந்திக் கொண்டிருந்தான்.

அப்போது அசரீரி “சங்கனனே வருந்தாதே. இப்பகுதியின் வடக்கே சற்று தூரத்தில் வேங்கடாத்ரி உள்ளது. அங்கே சென்று ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி ஸ்வாமியைத் தரிசனம் செய்து வழிபடு. அந்த ஸ்வாமி உனக்கு அருள் புரிந்திடுவார்'' என்று கூறியது. சங்கனனும் வேங்கடாத்ரிக்குச் சென்று ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி ஸ்வாமியைத் தரிசித்து, அசரீரி கூறியபடி பூஜைகளைச் செய்து வந்தான். ஸ்வாமியும் விரைவில் உன் இன்னல்கள் தீரும் என்று அருள் புரிந்தார்.

மக்கள் புரட்சி ஏற்பட்டு சங்கனனின் எதிரிகளும் அழிந்தனர். மக்களும் சங்கனனை அரசுரிமை ஏற்கக் கூறினர். அவனும் திருவேங்கடமுடையானின் பிரசாதத்துடன் மீண்டும் அரியணை ஏறினான்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*




**திருமலையில் இலவசமாக ஆர். ஓ. முறைப்படி குடிநீர் வசதியை ஆங்காங்கே நிறுவி பக்தர்களின் தாகம் தீர்ப்பதற்காகக் கொண்டு வந்ததே “தி.தி.தே. ஜலப்பிரசாத திட்டம்” ஆகும். பக்தர்களின் வசதிக்காக திருமலையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அனைத்து இடங்களிலும் கிடைக்கும் விதமாக தி.தி.தே. ஏற்பாடு செய்து உள்ளது.**



**திருமலையில் பக்தர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இலவசமாகச் செல்வதற்கு தகுந்த வகையில் ஸ்ரீவாரி தர்ம ரதம் என்கிற பெயரில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் உதவியால் பக்தர்கள் திருமலையில் பெரும்பாலான இடங்களுக்கும் செல்லலாம். திருமலையில் மட்டும் அல்லாமல் திருப்பதியிலும் இரயில் நிலையத்தில் இருந்து பேருந்து நிலையம், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு மலைவழிப்பாதை வரை தி.தி.தே. இப்பேருந்தை இயக்கி வருகிறது. இதனால் இரயில் நிலையத்தில் இருந்தும், பேருந்து நிலையத்திலிருந்தும் பக்தர்கள் மலை ஏறும் மார்க்கம் வரை இப்பேருந்தில் சென்று பின்னர் திருமலைக்குச் செல்லலாம்.**

# திருமலையில் அத்யயனோத்ஸவம் (23 நாட்கள்)

சிறிய திருவத்யயனத் தொடக்கம் மார்கழி மாதத்தில் சுக்ல பக்ஷ ஏகாதசிக்கு முன்னதாகப் பதினோரு நாளில், முதல் நாள் இரவு மூன்று திருவந்தாதிகள், நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம் ஆகியவற்றில் ஆத்யங்களாக பாசுரங்கள் அநுசந்திப்பர். இரண்டாம் நாள் காலை இயற்பா ஆயிரம் பாராயணம்; இரவு திருப்பல்லாண்டு தொடக்கம். மூன்றாம் நாள் காலை பெரியாழ்வார் திருமொழி இரண்டு பத்து; இரவு சென்னியோங்கு; நான்காம் நாள் காலை பெரியாழ்வார் திருமொழிக்குறை; இரவு விண்ணீல மேலாப்பு; ஐந்தாம் நாள் காலை திருப்பாவை, நாச்சியார் திருமொழி; இரவு ஊனேறு செல்வத்து; ஆறாம் நாள் காலை பெருமாள் திருமொழி முதலாகக் கண்ணிநுண் சிறுத்தாம்பு முடிவாக முதலாயிரம் எல்லாம்; இரவு திருமொழி தொடக்கம்; (அதாவது) வாடினேன் வாடியும், தாயே தந்தையும் பாராயணம்; ஏழாம்நாள் காலை திருமொழி இரண்டு பத்து; இரவு வாடமரு திடைபோகி; எட்டாம் நாள் காலை திருமொழி மூன்றாம் பத்தும், நாலாம் பத்தும்; இரவு பண்டை நான்மறை; ஒன்பதாம் நான் காலை ஐந்து, ஆறு, ஏழு பத்துக்கள்; இரவு தெள்ளியீர் தேவர்க்கும்; பத்தாம் நாள் காலை எட்டு, ஒன்பது பத்துக்கள்; இரவு காதில் கடிப்பிட்டு; பதினோராம் நாள் காலை பத்தாம் பத்தும், பதினோராம் பத்தும்; இரவு திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருமொழி சாற்றுகை; இப்படி பதினோரு நாளிலும் இரவு அரையர் கோயில் திருமொழியை இசையுடனே அநுசந்திப்பர்; மறுநாள் சேஷம் பாராயணம்.

பின்னர், சுக்ல ஏகாதசி தொடங்கிப் பெரிய திருவத்யயனத் திருநாள் பத்திலும் காலை வேளையில் அமுது செய்தருளின பின்பு நான்கு வேதங்களும், இதிகாச புராணங்களும் அநுசந்திப்பர். இரவு காலங்களில் தினமும் திருவாய்மொழி ஒரு பத்தாக அநுசந்திப்பர். பதினோராம் நாள் இரவு கண்ணிநுண் சிறுத்தாம்பு; பனிரண்டாம் நாள் இரவு இராமாநுச நூற்றந்தாதி; மறுநாள் ஞானப்பிரான் திருவாய்மொழி கேட்டருளுவார். திருமலையில் அத்யயனோத்ஸவத்தில் இரண்டாம் நாள் துவங்கி இருபத்து மூன்று நாளிலும் மாலையில் மலைகுனிய நின்ற பெருமாள் திருவீதி எழுந்தருள்வார்.



## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**15–10–2023 முதல் 23–10–2023 வரை திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு நடைபெற்ற வெவ்வேறு வாகன சேவைகளில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிகள். அதுபோது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்து கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திய கலைக்குழுவினர்**















## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலை பிரம்மோத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ. வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், இணைச்செயலாட்சித்தலைவர் (எச்.&இ.) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள், இணைச்செயலாட்சித் தலைவர்(திருப்பதி) திரு.வி.வீரபிரம்ஹம் அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள்



















22-10-2023 அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க வருகை புரிந்த மேதகு ஆந்திர மாநில ஆளுநர் உயர்திரு. எஸ்.அப்துல் நஜீர் அவர்களின் குடும்பத்தினரை வரவேற்று ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள்





18-10-2023 அன்று திருமலையில் சேவா சதன்-2ல் ஸ்ரீவாரி சேவகர்களின் மத்தியில் பக்தர்களுக்கான சேவையின் சிறப்பு குறித்து உரையாற்றும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள். அருகில் தி.தி.தே. மக்கள் தொடர்பு அலுவலர் டாக்டர் டி. ரவி அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்





07-10-2023 அன்று திருப்பதியில் தி.தி.தே. ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி உயர்நிலைப் பள்ளியில் உலக விண்வெளி விஞ்ஞான வாரத்தை முன்னிட்டு நடைபெற்ற விண்வெளி பொருட்காட்சியைக் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து மாணவர்களுக்கு பரிசினை வழங்கிய தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் திருமதி எஸ்.சதாபார்கவி (எச்.&இ.) ஐ.ஏ.எஸ். அவர்கள்

"அத்யயனம்" என்றாலே அநுசந்திப்பது, ஓதுவது, படிப்பது, திரும்பவும் நினைவிற்கு கொண்டு வருவது எனப் பல பொருள் உண்டு. முதன்முதலாக திருமங்கையாழ்வார் ஸ்ரீரங்கத்தில் மார்கழி மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசி முதலாகப் பத்து நாட்கள் வேத பாராயணத்துடன் திருவாய் மொழியை அனுசந்திக்க செய்து அதற்கு "திரு அத்யயன உத்ஸவம்" என்று பெயரிட்டு, அதை வருடாவருடம் நடைபெறச் செய்தார்.

ஒரு சமயம் ஸ்ரீரங்கத்தை சேர்ந்த ஆழ்வார் அரையர்கள் திருமலை யாத்திரை வரும்போது அவர்கள் மூலமாக இந்த அத்யயன உத்ஸவத்தை பற்றிக் கேள்விப்பட்ட திருமலையில் ஆசார்ய புருஷ ரான பெரிய திருமலை நம்பிகள், புஷ்ப கைங்கர்யம் பண்ணி வந்த ஆசார்யர் அனந்தாழ்வானோடு சேர்ந்து திருமலையில் இந்த அத்யயன உத்ஸவத்தைத் தொடங்கியதாக, "திருமலை ஒழுகு" என்கிற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாதாரணமாக "அத்யயனோத்ஸவம்" இருப்பத் தோரு நாட்களுக்கு நடைபெறும். ஆனால் நமது திருமலையில் இந்த உற்சவம் இருபத்து நான்கு நாட்கள் நடைபெறுகின்றது. ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் கிருஷ்ண பக்ஷ தசமி வரை பதினோறு நாட்களுக்கு "பகல் பத்து" உத்ஸவமாக பெரிய கோவில் கேள்வி அப்பன் பெரிய ஜீயர் சுவாமிகளும், சிறிய கோவில் கேள்வி அப்பன் சின்ன ஜீயர் சுவாமிக ளும் தொடங்கி வைக்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டி யாக அமர்ந்து பாராயணம் செய்வர். ஸ்ரீரங்கநாயக மண்டபத்தில் திருமலையப்ப ஸ்வாமி, உபய நாச்சிமார்களுடன் விசேஷ அலங்காரங்களுடன் கொலுவிருக்க, அவருடைய திருவடிகளுக்கு அரு கில் ஆசார்யர் இராமாநுஜரை எழுந்தருளப் பண்ணி இருப்பர். இங்கு ஸ்ரீராமாநுஜரே இந்த உத்ஸவத்தை நடத்தி வைப்பதாக ஐதீகம்.

அந்த பதினோரு நாட்களில் முதலாழ்வார்கள் அருளிய முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, திருமழிசை ஆழ்வார் அரு ளிய நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம், பெரியாழ்வார் அருளிய பெரிய திருமொழி, ஆண்டாள் பிராட்டி அருளிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி, குலசேகராழ்வார் அருளிய பெருமாள் திருமொழி, திருமங்கை ஆழ்வாரின் திருமொழி, பெரிய திருமடல், சிறிய திருமடல் ஆகியவற்றுடன் மதுரகவி ஆழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு பாசுரங்கள் பாராயணம் செய்யப்படும்.

வைகுண்ட ஏகாதசி அன்று சதுர்வேத பாராயணம் தொடங்கும். இதை திருமலை நம்பிகளின் வம்சத்தவர்களான தோழப்ப ராசாரியர்கள் முன்னின்று நடத்த, அதே மண்டபத்தில் திருமலையப்ப ஸ்வாமியின் திருவடிகளுக்கு அருகில்

# திருமலையில் அத்யயன உத்ஸவமும் வைகுண்ட ஏகாதசியும்

- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி.



சேனை நாயகரான ஸ்ரீவிஷ்வக்சேநர் வீற்றிருப்பார். வேத பாராயண கோஷ்டி சதுர் வேத பாராயணத்தை ஆரம்பித்து கிருஷ்ணபக்ஷ பஞ்சமி அன்று முடிப்பர். அதே வைகுண்ட ஏகாதசி இரவில் பிரபந்த பாராயணத்தில் "இராப்பத்து" உத்ஸவம் தொடங்கும்.

இதில் நம்மாழ்வாரின் திருவாய்மொழி பாசுரங்களை பாராயணம் செய்ய, கடைசி நாள் இரவு



பெரிய சாற்று முறையோடு நிறைவு பெறும். இந்த இருபத்தொரு நாட்களுக்குப் பிறகு ஆசார்யர் இராமாநுஜரை கௌரவிக்கும் வகையில் "இராமாநுஜ நூற்றந் தாதி"யைப் பாராயணம் செய்வர்.

மறுநாள் பிரபந்த பாராயணமும் வேத பாராயணமும் காலையும், இரவும் இடம் பெறும். முடிவாக "தண்ணீர் அமுது உற்சவம்" நடைபெறும். திருமலையில் முதல் ஆசார்ய புருஷரான பெரிய திருமலை நம்பிகளை கௌர விக்கும் வகையில் "ஆகாச கங்கை" ஆவிர்பவித்த நாளாக ஏற்படுத்தி கொடுத்தார் இராமாநுஜர். இத்துடன் திருமலை யில் அத்யயன உத்ஸவம் நிறைவு பெறுகிறது.

தனுர் மாதம் எனப்படும் மார்கழி மாதத்தில் வளர்பிறையில் வரும் ஏகாதசி வைகுண்ட ஏகாதசி எனப்படும். இந்த ஏகாதசி மஹாவிஷ்ணுவிற்கு மிகவும் உகந்த நாள். இந்தப் புண்ணிய நாளில் எவர் விரதமிருந்து எம்பெருமானின் திருநாமத்தை உச்சரித்து வழிபடுகிறார்களோ, அவர்களது பாபங்களை விலக்கி, முக்தி என்கிற மோக்ஷத்தைத் தரவல்லது தான் மார்கழி மாத சுக்ல பக்ஷத்தில் வருகின்ற வைகுண்ட ஏகாதசி.

திருமலையில் இந்த வைகுண்ட துவார தரிசனம் சாதாரண பக்தர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்துடன் திருமலை திருப்பதி தேவஸ்தானம் சிறப்பு ஏற்பாடுகள் செய்துள்ளது. பத்து நாட்களுக்கு இந்த வைகுண்ட வாயில் திறந்திருக்கும்.

திருப்பதியில் ஆங்காங்கே கௌண்ட்டர்கள் திறக்கப்பட்டு வைகுண்ட வாயில் தரிசனத் திற்கான டோக்கன்கள் வைகுண்ட ஏகாதசிக்கு முன்னதாக வழங்குவர். பக்தர்கள் தங்களது ஆதார் அட்டையைக் காண்பித்து இந்த டோக்கன் களை பெற்றுக் கொள்ளலாம். திருமலையில் ஸ்வாமி தரிசனத்திற்குச் செல்லும் போது டோக்கனை தவறாமல் பதிவு (ஸ்கேன்) செய்தல் வேண்டும். தி. தி. தே. செய்யும் இந்த மிகப் பெரிய உபகாரத்தை பக்தர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, கலியுக தெய்வமாம் திருவேங்கடமுடையானின் திருவருளுக்குப் பாத்திரமாகலாம்.

# கீதையும் பாவையும்



-திரு.ஏ.கே.கோபி,
கள்ளக்குறிச்சி,
94987 47401

பகவத் கீதை குருக்ஷேத்திர போர்க்களத்தில் தேர்த்தட்டில் கலங்கிய மனத்தனனாய் கடமையை மறந்து துக்கத்தில் இருந்த அர்ஜுனனுக்கு கண்ணபிரானால் உபதேசம் செய்யப் பட்டு போர்த் தொழில் செய்து ராஜ்ஜியத்தினை மீட்டெடுக்க உதவியது. திருப்பாவை ஆண்டாள் நாச்சியாரால் ஆயர்பாடியில் ஆயர்குலப் பெண்கள் கண்ணனின் திருவடிகளை சரணடைந்து உய்வடைவதற்காக அவர்களை தூக்கத்தில் இருந்து எழுப்பும் விதமாக பாவை நோன்பாக அருளப்பட்டது.

பகவத் கீதையில் ராஜ, கர்ம, ஞான, பக்தி யோகங்கள் அருளப்பட்டு முடிவில் ப்ரபத்தி எனும் மிகவும் எளிதான, அனைவராலும் கடைபிடிக்கும் விதமான சரணாகதி தத்துவம் ஜீவாத்மாக்களுக்கு நிர்ணயமாயிற்று. திருப்பாவையில் இடம்வலம் அறியாத ஆயர்குலப் பெண்களின் அதீத பக்தியினை அடிப்படையாகக் கொண்டு பூமா தேவியே ஆண்டாளாக அவதாரம் செய்து கண்ணனின் திருவடிகளை அடைவதான சரணாகதி தத்துவம் ஜீவாத்மாக்களுக்கு அருளப்பட்டது.



## மார்கழித் திங்கள்

கீதையில் (10–35) பகவான் – சாமங்களில் ப்ருஹத் சாமம் நானே, சந்தஸ்ஸுக்களுள் காயத்ரி நானே, *''மாதங்களுள் மார்கழி நானே''* என்று அருளுகிறார். மனித வர்க்கத்தின் ஒரு ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். மார்கழி மாதம் தேவர்களுக்கு அதிகாலை பிரம்ம முகூர்த்த இறை வழிபாட்டு காலம்.

ஆண்டாளும் திருப்பாவை நோன்பினை மார்கழியின் முதல் நாளில் சந்திரன் முழு நிலவாக பிரகாசிக்கும் நேரத்தில் கண்ணனுக்கு விருப்பமான மார்கழி மாதத்தில், தேவர்களின் வழிபாட்டு காலத்தில் ஜீவாத்மாக்களின் பிரார்த்தனை முழுவதும் நிறைவேறும் விதமாக *''மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்...''* எனத் திருப்பாவை பாசுரங்களை துவக்கி ஜகத் காரகனான ஸ்ரீமந்நாராயணனே அனைத்து கைங்கர்யங்களையும் அருள வேண்டும் எனப் பிரார்த்தனை செய்கிறாள்.

## நெய்யுண்ணோம்

அளவுக்கு அதிகமாக உண்பவனுக்கும், தூங்குபவனுக்கும், தம்முடைய லோகாயதமான செயல்களில் அதீத ஈடுபாடும் நாட்டமும் உடையவனுக்கும் யோகம் கை கூடாது என கீதை (6–16) இயம்புவதை

திருப்பாவை *"வையத்து வாழ்வீர்காள்"* பாசுரத்தில் நெய்யுண்ணோம் பாலுண்ணோம் எனவும், மையிட் டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம் எனவும், பாவை நோன்பில் புலன்களின் அடக்கத்துடன் மிகவும் சிரத்தையுடன் இருப்பதை தெரிவிக்கிறாள்.

## உத்தமன் பேர்பாடி

*"ஓங்கியுலகளந்த"* பாசுரத்தில் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து விண்ணையும் மண்ணையும் அளந்தவனான எம்பெருமானின் திருநாமங்களை பக்தியுடன் கூற வேண்டும். அவன் லீலா விநோதங் களின் புகழினைப் போற்றிப் பாட வேண்டும். நீர்வளம் மிகும்போது விளைச்சலும் பால்வளமும் பெருகி செல்வம் கொழிப்பதைப்போல பக்தி மிகுதியால் துதி செய்யும் போது பாவங்கள் ஒழிந்து பேரின்ப வாழ்வு நிச்சயிக்கும் என்கிறாள் ஆண்டாள்.

பகவானும் கீதையில் (9–1) எதனை அறிந்து கொள்வதால் புண்யபாபங்கள் அனைத்திலிருந்தும் விடுபடுவாயோ இந்த அதி ரஹஸ்யமான உபாசன ரூபமான மார்க்கத்தை உனக்கு நான் கூறுகிறேன் என்கிறார். மற்றைய பாசுரங்களில், *"நாமம் பலவும் நவின்றேலோரெம்பாவாய்"* எனவும், *"மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்"* எனவும், *"மற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாடேலோரெம்பாவாய்"* எனவும், *"தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்"* எனவும், *"திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி"* எனவும் பக்தியோடு துதி செய்து பாடும் உபாசனையை ஆண்டாள் அருளுகிறாள்.

## தூமலர் தூவித் தொழுது

வடமதுரை திருத்தலத்தில் கம்சனின் சிறையில் தேவகி திருவயிற்றிலிருந்து அவதரித்து புனிதமான யமுனை ஆற்றினைக் கடந்து, ஆயர்பாடிக்கு வந்து யசோதையின் இல்லத்தினை ஒளிபெறச் செய்து, பல சேஷ்டிதங்கள் புரிந்து வளர்ந்தவனான கண்ணனை மனதினிலே நீங்காமல் நிலைபெறச் செய்தல் வேண்டும். தூய்மையான மலர்களால் அர்ச்சித்தும் அவன் பெருமைகளைப் பாடி துதி செய்ய ஜீவாத் மாக்களின் கர்ம வினை முற்றும் தீயினில் தூசு போன்றே எரிந்து சாம்பலாகும் என்கிறாள் ஆண்டாள் *"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை"* பாசுரத்தில்.

கீதையில் (9–26) கண்ணபிரான் "ஓரிலையாவது, மலராவது, பழமாவது, ஜலமாவது எவனொருவன் எனக்கு பக்தியுடன் கொடுக்கிறானோ மனதினை அடக்கிய அந்த பக்தனால் அளிக்கப்பட்ட அவற்றை கிடைத்தற்கரியது கிடைத்தார்போலே உணர்கிறேன்" என்றருளுகிறார். *"ஒருத்தி மகனாய் பிறந்து..."* பாசுரத்தில் *"வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"* என்றருளுகிறாள்.



## சம்பவாமி யுகே யுகே

*பரித்ராணாய சாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம்*
*தர்ம சம்ஸ்தாப நார்த்தாய சம்பவாமி யுகே யுகே* (4–80)

கீதையில் (9–26) கண்ணபிரான் "நல்லோர்களை காப்பதன் பொருட்டும், தீயவர்களை சித்ரவதை செய்து அழிப்பதன் பொருட்டும், அறத்தை நன்கு நிலைநிறுத்துவதன் பொருட்டும் அந்தந்த யுகங்களில் பலபடியாகப் பிறக்கிறேன்" என்கிறார்.

"கீழ்வானம் வெள்ளென்று" பாசுரத்தில் ஆயர்பாடியில் கண்ணனை கொல்வதற்கு கேசி எனும் அசுரன் குதிரையின் வடிவமெடுத்து வந்த போது அவன் வாயினை கிழித்துக் கொன்றும், கொடும் மல்லர்களை அழித்தவனும், தேவர்களுக்குத் தலைவனுமான கண்ணபிரான் பாகவ தோத்தமர்களின் பிரார்த்தனைகளை முற்றும் நிறைவேற்றி காத்தருளும் பொருட்டே இந்நிலவுலகில் அவதாரம் செய்தருளுகிறான்.

## எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும்

*"சிற்றம் சிறுகாலை வந்துன்னை சேவித்து"* பாசுரத்தில் ஆயர்குலப் பெண்கள் – எம்பெருமானே விடியற்காலை

பொழுதுகளில் மாதம் முழுவதும் நோன்பிருந்து நின் பொன்மயமான தாமரைத் திருவடிகளில் சரணாகதி செய்து நோன்பினை முடிக்கிறோம். ஆயர்குலத்தில் அவதாரம் செய்தவனான உன்னுடைய அந்தரங்க கைங்கர்யத்தினை இந்த பிறவி மட்டுமல்லாது இனி வரவிருக்கும் ஏழேழ் பிறவிகளுக்கும் தந்தருள பிரார்த்தனை செய்கின்றனர். ஸ்ரீவைகுந்த புருஷார்தத்தினையும், கைங்கர்யத்தினையும் பகவானிடம் சரணாகதியின் வாயிலாக பிரார்த்தனை செய்கின்றனர்.

கீதையில் (4–9) கிருஷ்ணன் "என்னுடைய அப்ராக்ருதமான பிறப்பையும், சேஷ்டிதங்களையும் எவன் இப்படி உண்மையாக அறிகிறானோ அவன் தேஹத்தை விட்டு மறுஜென்மம் அடையான் என்னையே அடைவான்" என்றருளுகிறார்.


**எங்கும் திருவருள் பெற்று**

*ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ*
*அஹம்த்வா சர்வபாபேப்யோ மோஷயிஷ்யாமி*
*மாஸுச*

*(18–66)*

## 2024, ஜனவரி மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 06 | திருமலையப்ப ஸ்வாமி திருக்கச்சி நம்பி சன்னதியில் எழுந்தருளுதல். |
| 07–13 | ஸ்ரீஆண்டாள் நீராட்டோத்ஸவம் |
| 09 | தொண்டரடிப் பொடியாழ்வார் திருநட்சத்திரம். |
| 10–பி.2 | ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி அத்யயனோத்ஸவம் |
| 14 | போகிப்பண்டிகை, போகித்தேர். |
| 15 | பொங்கல் பண்டிகை, மகர சங்கராந்தி |
| 16 | கோதா பரிணயம், மாட்டுப்பொங்கல், கனும பண்டிகை, திருமலையப்ப ஸ்வாமி பார்வேட்டி மண்டபத்தில் எழுந்தருளுதல். |
| 25 | இராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி. |
| 26 | இந்திய குடியரசு தினம். |
| 28 | திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம். |
| 30 | தியாகராஜ ஸ்வாமி ஆராதனை. |
| 31 | கூரத்தாழ்வார் திருநட்சத்திரம். |



"எல்லா தர்மங்களையும் வாசனையுடன் விட்டுவிட்டு என் ஒருவனையே உபாயமாக அடை. நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன் துக்கமடைய வேண்டாம்" என்கிறார் கண்ணன்.

*"வங்கக் கடல் கடைந்த மாதவனை"* பாசுரத்தில் பூரணச் சந்திரனை போன்ற அழகிய திருமுகம் உடையவர்களான ஆயர்குலப் பெண்கள் பாவை நோன்பு நோற்று தேவர்களுக்கு அமுதம் கிடைக்க திருப்பாற்கடலை கடைந்தவனான கேசவனை சரணாகதி அனுஷ்டித்து, ஸ்ரீவைகுண்டத்தில் அவன் திருமுக தரிசனத்தையும், திருக்கண்களையும் என்றென்றும் சேவித்து கைங்கர்யம் செய்யும் திருவருள் கிடைக்கப்பெற்று இன்புற்றிருப்பர் என திருப்பாவையின் பலனை நிர்ணயித்து தலை கட்டு கிறாள். இவ்வாறாக கீதையின் சாரமாக ஆண்டாள் திருப்பாவையை அருளுகின்றாள்.




*– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*

**புராண வரலாறு :**

பஞ்சபூதங்களில் நீர் வடிவாய் இருப்பது, எம்பெருமானின் பொதுவான தன்மையாகும். திருநீரகம் என்ற இத்திவ்ய தேசத்தின் பெயர்க்காரணமாக, பிரளய வெள்ளத்தில், ஆலிலையின் மீது துயிலும் பாலகனாய், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் காண்கிறார். அதனால் ஆலிலையில் நீர்வண்ணனாகத் தம்மைக் காட்டியதால், நீரின் அகத்தே தம்மைக் காட்டியதால் இவ்வூருக்குத் திருநீரகம் என்ற திருப்பெயர் இருக்கலாம். மேலும், சத்திய விரதன் என்ற பக்தியுடைய மாமன்னனுக்கு அவன் விரும்பியவண்ணம், பிரளயகால வெள்ளத்தின்போது எம்பெருமான் மச்ச அவதாரம் செய்து, தனது திருவிளையாடலைக் காட்டியதாலும் இப்பெயர் வந்திருக்கலாம்.

ஆனால் இத்தலத்தில், எம்பெருமான், அக்ரூரருக்கு காட்சி கொடுத்ததாகவும், இத்தலத்தில் உள்ள தீர்த்தத்திற்கு அக்ரூர தீர்த்தம் என்று பெயர் உள்ளதாகவும் கூறுகின்றனர். அக்ரூரரைப் பற்றிக் கூறுகின்ற புராணம் ஸ்ரீமத் பாகவதம் ஆகும். கண்ணனை அழைத்துச் செல்வதற்காக வடமதுரையில் இருந்து, பிருந்தாவனம் வந்த அக்ரூரரின் பயணத்தை "அக்ரூராயணம்" என்பர். கண்ணனையும் பலராமனையும் அழைத்துக் கொண்டு, வடமதுரை திரும்பும் வழியில், யமுனை நதியில், நீராடுவதற்காக, கண்ணனையும் பலராமனையும் தேரில் அமரச் செய்துவிட்டு, நதியில் இறங்கினார் அக்ரூரர். அப்போது யமுனை நதியின் தூயபெரு நீரில், மிகச் சிறந்த தெய்வீகக் காட்சிகளை எம்பெருமான் காட்டியதாக பாகவதம் கூறுகிறது.

**சிறப்புகள் :**

எம்பெருமான், கிருஷ்ணாவதாரத்தில் "அக்ரூரர்" என்ற பக்தருக்குக் காட்சி கொடுத்து அருளியதாகத் தலவரலாறு கூறுகிறது. குரூரம் (கொடுமை) அற்றவர் என்ற பொருளில் அக்ரூரர் என்ற பெயர் அமைந்து உள்ளது.

இராமாவதாரத்தில் இவரே சுமந்திரன் என்ற பெயரில், தசரதனின், அமைச்சனாகவும், தேர் ஓட்டுபவனாகவும், பணி புரிந்த காரணத்தால், கைகேயியின் ஆணையால் ஸ்ரீராமனைக் காட்டில் கொண்டு சேர்க்கும் பணியைச் சுமந்திரன் செய்ய நேரிட்டதாகவும், அப்போது காட்டில் இராமனை விடுத்துப் பிரியும்போது, தன்பால் கொண்ட பேரன்பினால், சுமந்திரன் பட்ட பெருந்துன்பத்தையும், அவனது தேர்க்குதிரைகள் பட்ட பாட்டினையும், அறிந்த ஸ்ரீராமன், தனது அடுத்த அவதாரமான கிருஷ்ணாவதாரத்தில், சுமந்திரனையே அக்ரூரராகப் பிறக்கச் செய்து, இராமாவதாரத்தில் சுமந்திரன் பட்ட துன்பத்திற்கு மாற்றாக, பிருந்தாவனத்திலிருந்து, வடமதுரைக்குத் தன்னை அழைத்து வரும் பணியை அக்ரூரருக்கு அருளியதாகவும் கூறுவர். இராமாவதாரத்தில், சுமந்திரனின் தேர்க்குதிரைகள், தம்மிடம் காட்டிய பேரன்பைக் கருதியே, கிருஷ்ண அவதாரத்தில், எம்பெருமான், தேர்ப்பாகனாய் (குதிரைச் சேவகனாய்) பணிபுரிந்தான் என்றும் கூறுவர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | உத்ஸவர் ஜகதீசப் பெருமாள், கிழக்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம் நீரகத்தான். |
| தாயார் | : | நிலமங்கைவல்லித் தாயார் |
| தீர்த்தம் | | அக்ரூர தீர்த்தம். |
| விமானம் | : | ஜகதீஸ்வர விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | அக்ரூரர். |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |
| விசேஷம் | : | "ஆம்பலம் தீங்குழல் இசைக்கும் அண்ணலைப் பூம்புனல் குடைகுவான் புனலுள் கண்டனன்" என்று செவ்வை சூடுவார் பாகவதம் கூறுகிறது. |

**த்யானச்லோகம் :**

*க்யாதே நீர நிகேதநேச விமலம் த்வக்ரூர*
*தீர்த்தம் மஹத்*
*தத்தீரேச ஜகத் விமாநமபி தத்தேவீச ஸர்வம் ஸஹா ।*
*பூர்வா சாபி முக: ப்ரஸந்நவதனச் சாக்ரூர ஸாக்ஷாத்*
*க்ருத:*
*ஸ்மர்த்ரூணாமபி வாஞ்சிதாததி கதோ நாம்நா*
*ஜகந் நாயக: ॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் தனது திருவரங்கத்து மாலையில்,

*"நீரில்புகும் கண்டு நேரினைப் பார்க்கும்*
*நிறுத்தியபொன்*
*தேரில் தொழும்; பின்னை நீரினில் காணும்;*
*சிறந்த பச்சைக் காரின் நிறமெய் அரங்கனும்*
*சேடனும்,*
*கஞ்ச வஞ்சன் ஊரின் செலஉடன்போம்,*
*அக்ரூரன் தன் உள மகிழ்ந்தே"*

என்று பாடி மகிழ்கிறார்.

பகவானுக்கும் நீருக்கும் உள்ள 22 பண்புகளை, ஸ்ரீஉப்யவே காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் தாம் எழுதிய 'ஸ்வாப தேசார்த்த ஸாகரம்" என்னும் அரிய நூலில் தொகுத்துக் கூறியுள்ளார். வியாக்யானச் சக்கரவர்த்தி ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளை தனது வியாக்யானத்தில், திருநெடுந்தாண்டகத்தில், "நீரகத் தாய்!" என்ற அருளிச் செயல் தொடருக்கு விளக்கம் அருளும்போது, "திருநீரகத்திலே நித்ய வாஸம் பண்ணுகிறவனே!" என்றும், "நீரினுடைய ஸ்வ பாவத்தை (இயல்பை) உடையவன், வர்த்திக் கையாலே (வாழ்கின்ற காரணத்தால்) நீரகம் என்ற திருப்பதியைச் சொல்லுகிறது" என்று வியாக்யானம் சொல்கிறது.

*"நீரகத்தாய்! நெடுவரையின் உச்சிமேலாய்!*
*நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்தகச்சி*
*ஊரகத்தாய், ஒண்துறை நீர் வெஃகா உள்ளாய்!*
*உள்ளுவார் உள்ளத்தாய், உலகம் ஏத்தும்*
*காரகத்தாய்! கார்வானத்து உள்ளாய்! கள்வா!*
*காமரு பூங் காவிரியின் தென்பால் மன்னு*
*பேரகத்தாய்! பேராது என் நெஞ்சில் உள்ளாய்!*
*பெருமான் உன் திருவடியே பேணினேனே!*

– திருமங்கையாழ்வார்

*"ஆயத்து இலை சேர்ந்து அழி உலகை*
*உள்புகுந்த*
*காலத்தில் எவ்வகை நீ காட்டினாய் -*
*ஞாலத்துள்*
*நீரகத்தாய்! நின் அடியேன் நெஞ்சகத்தாய்! நீள்*
*மறையின் வேர் அகத்தாய்! வேதியற்கும் ஈண்டு"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*751. ஓம் மாதவ: நம:*

லக்ஷ்மீபதி.

*ஓம் த்ரயீ: நம:*

ருக், யஜுர்,சாம வேதங்களால் அறியத்தக்க பெருமை உடையவள்.

*752. ஓம் பக்தவத்ஸல: நம:*

பக்தர்களிடம் மிகவும் பிரியம் உள்ளவன்.

*ஓம் வார்த்தா: நம:*

விவசாயம், வாணிபம் போன்ற பொருளாதார காரியத்தைத் தனதாக உடையவள்.

*753. ஓம் ஸுவர்ணவர்ண: நம:*

பொன்நிறத் திருமேனி வண்ணம் உள்ளவன்.

*ஓம் தண்டநீதி: நம:*

ராஜ நீதி சாஸ்த்ரத்தை அபிமானிப்பவள்.

*754. ஓம் ஹேமாங்க: நம:*

பொன்னிறமான திருவுருவினன்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

### திருமலையில் பக்தர்களுக்கு தடைவிதிக்கப்படுவன

- திருமலையில் புகைபிடித்தல், போதை தரும் பொருட்கள், மாமிச உணவுப்பொருட்கள் உட்கொள்வதற்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது.
- எம்பெருமான் தரிசனம் மற்றும் தங்குவசதிக்காக தளாலிகளை அணுகாதீர்கள்.
- தெருவில் விற்கும் போலி பிரசாதங்களை வாங்காதீர்கள்.
- பிச்சைக்காரர்களை உற்சாகப்படுத்தாதீர்கள்.
- கோயில் வளாகத்திற்குள் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களைச் செய்யாதீர்கள்.
- பிற மத பிரசாரம் செய்யாதீர்கள்.
- பல்வேறு வகையான அரசியல் கூட்டங்கள், சுவரொட்டிகள், போராட்டங்கள், கடையடைப்புகள் முதலானவைகளுக்கு திருமலையில் தடைவிதிக்கப்பட்டுள்ளன.
- விலங்குகள் வதை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
- திருமலையில் சூதாட்டம், சீட்டாட்டம் முதலானவைகளுக்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளன.
- கோயிலுக்குள் அலைபேசி, புகைப்படக்கருவி முதலான மின்னணுக்கருவிகளை எடுத்துச் செல்லவும், ஆயுதங்களைக் கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது..

– செயலாட்சித் தலைவர்



*ஓம் நயாத்மிகா: நம:*

மீமாம்ஸம் போன்ற ந்யாய சாஸ்த்ரங்களில் உள்ளவள்.

*755. ஓம் வராங்க: நம:*

சிறந்த திருமேனியை உடையவன்.

*ஓம் வ்யாளீ: நம:*

அடியார்களின் பயத்தைப் போக்கித் தனக்கு உரிமையாக்கிக் கொள்பவள்.

*756. ஓம் சந்தநநாங்கதீ நம:*

மகிழ்ச்சி அளிக்கும் திருவாபரணங்களை அணிந்தவன்.

*ஓம் ஸங்கர்ஷிணீ: நம:*

ஸம்ஸாரத்தில் மூழ்கி இருப்பவர்களை காப்பாற்றுபவள்.

*757. ஓம் வீரஹா: நம:*

அசுரவீரர்களை அழித்தவன்.

*ஓம் த்யோதா: நம:*

அவர்களின் தர்மபூத ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்பவள்.

*758. ஓம் விஷம: நம:*

தீயோரைத் தண்டித்து, நல்லோரைக் காக்கும் தன்மை உடையவன்.

*ஓம் மஹாதேவீ நம:*

எங்கும் வியாபித்து எல்லாவற்றையும் சாக்ஷாத்கரிக்கும் ஞானம் உடையவள்.

*759. ஓம் ஸிந்ய: நம:*

எவ்விதக்குற்றமும் இல்லாதவன்.

*ஓம் அபராஜிதா: நம:*

எல்லாரையும் ரக்ஷித்து பகவானாலும் வெல்ல இயலாதவள்.

*760. ஓம் க்ருதாஸீ: நம:*

உலகங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த விருப்பமுள்ளவன்.

*ஓம் கபிலா: நம:*

அடியார்கள் தியானம் செய்யும்போது நன்கு ஜ்வலிப்பவள்.

*ஸ்ரீமதே பூவல்லீ (நிலமங்கைவல்லீ) நாயிகா ஸமேத ஸ்ரீஜகதீஸ்வர பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

பெரிய காஞ்சிபுரத்தில் ஸ்ரீஉலகளந்த பெருமாள் சந்நிதி வடக்குத் திருச்சுற்றில் இச்சந்நிதி உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*

சென்ற இதழின் தொடர்ச்சி...



## ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# திருவரங்கப் பெருமாள் அரையர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

(ஏதமில் வண் கச்சியனை ஏத்தி இசைப்போன்) கச்சி–"காஞ்சி" என்னும் வட சொல்லின் சிதைவு. பிரமனால் பூஜிக்கப்பட்டது என்று பொருள். பூமியாகிய பெண்ணுக்கு அரையில் அணியும் அரைநூல் மாலை ஸ்தானத்தில் உள்ளது பற்றி வந்த பெயர் என்று கூறுவாரும் உளர். கச்சிக்கு வண்மையாவது "நிறைந்த சீர் நீள் கச்சி" (பெரிய திருமொ.2.9) என்னும்படி திருப்பதிகளாலே நிறைந்த சீரை உடையதாய் "அழகாய கச்சி" (பெரிய திருமொ.2–9–1) என்கிறபடியே நகர அலங்காரங்களையும் உடையதாயிருக்கை மற்றும் கச்சி வெஃகாவில் படுத்திருக்கும் சொன்னவண்ணம் செய்த பெருமாளையும், கச்சிநகர் வந்துதித்த பொய்கையாழ்வாரையும் ஸம்ஸாரிகளும் கண்டு வாழும்படி உதவி செய்து கொண்டிருக்கிற வண்மையாகவும் உரைப்பர்.

(கச்சியனை ஏத்தி இசைப்போன்) கச்சியனை ஏத்தி இசைத்தலாவது – ஆழ்வார்கள் பாடல்களாலே கச்சியில் உள்ள எம்பெருமானைத் துதித்தல். அது எவ்வாறெனில் – இராமாநுசர் காஞ்சியில் பேரருளாளனுக்கு கைங்கர்யம் செய்து வந்தார். அப்போது ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் சீடர்களான பெரிய நம்பி முதலானோர் நம்பெருமாளிடம் இராமாநுசரை நம்பெருமாள் ஸந்நிதியிலே நித்யவாஸம் பண்ணும்படி இங்கே அழைத்தருள வேணும் என்று வேண்டினர். பெரிய பெருமாளும் உடனே பேரருளாளரான தேவப்பெருமாளுக்குத் திருமுகம் அனுப்பினார்.

தேவப் பெருமாளும் "தந்தம் அபிமானத்தை வெளியே போக விட்டாலன்றோ நாம் நம் இராமாநுசனை விடுவது" என்றார். இந்த விஷயத்தை அறிந்த பெரிய நம்பி முதலானோர் இனிச் செய்வது என்ன? என்று யோசித்தபோது "தேவப் பெருமாள் பரம உதாரராயிருப்பர். பாட்டுக்கு மிகவும் நல்லராயிருப்பர்" என்று திருவரங்கப் பெருமாள் அரையரை அழைத்து, "புண்ணியத்தை வளர்ப்பதாய்ச் சொல்லப்பட்ட காஞ்சிபுரத்துக்கு தேவரீர் எழுந்தருளி, புண்ணியகோடி விமானத்தின் நடுவில் எழுந்தருளி இருப்பவராய் எல்லாருக்கும் எல்லா விருப்பங்களையும் கொடுப்பதில் ப்ரதானரான தேவப் பெருமாளைப் பாடி உகப்பித்து நமக்கு இராமாநுசனைத் தர வேணும் என்று கேட்டு வாங்கி அழைத்துக் கொண்டு எழுந்தருள வேணும்" என்று விண்ணப்பம் செய்தனர்.

அரையரும் உடனே பெருமாள் கோயிலுக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு மறுநாள் அங்குள்ள அரையர் மூலமாக கோயிலுக்குச் சென்றபோது, அங்குத் திருக்கச்சி நம்பியும் திருவாலவட்டம் பரிமாற அருகே இராமாநுசரும் தேவராஜ அஷ்டகத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். நம்பியோடு பேரருளாளனைச் சேவித்துத் தீர்த்தப் பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டார். அரையரும் **''திருப்பொலிந்த சேவடி என் சென்னியின்மேல் பொறித்தாய்''** என்று சொல்லும் போது, பெருமாளும் இவரை அருளப்பாடிட்டருள, அரையர் பக்தியை

முன்னிட்டு பூதத்தாழ்வார் பாடிய இரண்டாம் திருவந்தாதியில் *''என் நெஞ்சமேயான்''* என்று தொடங்கி... *''உலகேத்தும் ஆழியான் அத்தியூரான்''* (இ.திரு.95) என்றும், *''பிணியவிழ் தாமரை மொட்டலர்த்தும் பேரருளாளர்''* என்றும், *''தொழுதெழு தொண்டர்கள் தமக்குப் பிணி ஒழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளன்''* (பெரிய திரு.1–4–4) என்றும் இப்படி ஆழ்வார்கள் பாசுரங்களைப் பாலேய் தமிழான பண்ணார் பாடல் இன்கவிகளை தேவ கானத்தில் இயலும் இசையுமாக அபிநயத்துடனே பாடினார். பேரருளாளரும் *''தென்னா தென்னா என்னம்மான்''* என்கிறபடியே மிகவும் உகந்து தாம் அணிந்திருந்த திருமுத்தின் தாழ்வடம், திருப்பரிவட்டம், கொடை, சாமரம் மற்றும் உண்டான வரிசைகளெல்லாம் கொடுத்தார். இப்படி கச்சி எம்பெருமானை ஏத்தி இசையுடன் பாடின அரையருக்குப் பல்லாண்டு.

(எதிபதியைப் பரிசாகவேற்று வந்தோன்) எதிபதி –யதிகளுக்குத் தலைவரான இராமாநுசர். இவர் காஞ்சியில் தேவப்பெருமாளுக்கு கைங்கர்யம் செய்து வந்தார். மேற்கூறியபடி அரையர் இசையாலே ஏத்தியதை உகந்து பேரருளாளர் தாம் அணிந்திருந்த திருமுத்தின் தாழ்வடம் முதலானவற்றைக் கொடுத்து உபசரித்த பிறகு அரையர் பேரருளாளரிடம் "ஸ்வாமி! இவை ஒன்றிலும் தமக்கு விருப்பமில்லை. தேவரீர் விரும்பிய பொருளைக் கொடுப்பதில் தீக்ஷிதராகையாலே அடியேன் யாசிப்பதைக் கொடுக்க வேணும்" என்றார். மறுபடியும் கனக்க பாசுரங்களைப் பாடினார்.

பெருமாளும் அத்தைக் கேட்டு சந்தோஷம் அடைந்து "நாமும் நம் பெண்டுகள் உபய நாச்சிமார்கள் ஒழிய நீர் வேண்டியதைத் தருகிறோம்" என்று சொல்ல, அரையரும் அங்கே இருந்த இராமாநுசரைக் காட்டி, "இவரை அடியேனுக்குத் தந்தருள வேணும்" என்று விண்ணப்பம் செய்தார்.


பேரருளாளரும், "அப்போதே அறிய வில்லையே! இராமாநுசரையொழிய நீர் வேண்டினதெல்லாம் தருகிறோம், கேளீர்" என்று அருளினார். அரையரும் "இராமன் இரண்டு விதமாகப் பேச மாட்டான்" என்கிற தேவரீர் இரண்டு வார்த்தை சொல்லலாமோ?" என்று விண்ணப்பம் செய்தார். பேரருளாளரும் "வருத்தத்தோடே தந்தோம் கொண்டு போகல் ஆகாதோ" என்றார்.

## ஒரே க்ளிக்கில் தரிசனம் டிக்கெட்




**திருவேங்கடமுடையானின் பக்தர்களுக்கு டிஜிட்டல் வடிவில்** TTDEVASTHANAMS **என்கிற மொபைல் செயலியை திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தச் செயலியில் நவீனப்படுத்தப்பட்ட அதிக அப்ளிகேஷன்கள் இணைக்கப்பட்டு உள்ளன. இந்த மொபைல் செயலியின் வாயிலாக பக்தர்கள் திருமலை ஸ்ரீவாரி தரிசனம், சர்வ தரிசனம், சேவைகள், அங்கபிரதக்ஷிணம், ஸ்ரீவாரி சேவை, தங்குமிடம் போன்றவற்றை முன்பதிவு செய்யலாம். நன்கொடைகள் செலுத்திட லாம். புஷ் நோட்டிபிகேஷன் மூலம் திருமலை ஆலயத்தில் நடைபெறும் உற்சவ விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். மேலும், எஸ்.வி.பி.சி. ஒளிபரப்புகளான நேரடி ஒளிபரப்புகளையும் காண இயலும். கணினி பயன்படுத்தத் தெரியாதவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மொபைல் செயலியால் கையடக்க கைபேசியின் வழியாக திருவேங்கடமுடையானை கண நேரத்தில் காணும் பாக்கியத்தைப் பெறலாம்.**

# கோயில்களில் பிரசாதங்கள் வழங்குவதன் நோக்கம் என்ன?



**ப்ரஸாதம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு "மனத் தெளிவு" என்பது பொருள். தெய்வங்கள் நம்மைப்போல ஸ்தூலமாகச் சாப்பிடுவதில்லை. ஒரு தெய்வத்திற்கு நாம் நைவேத்தியம் செய்யும்போது, அந்தத் தெய்வத்தின் கண்களிலிருந்து ஓர் ஒளி புறப்பட்டு வந்து, நாம் நைவேத்தியத்திற்கென்று வைத்த உணவுப் பொருட்களை ஸ்பரிசிக்கிறது என்று சாஸ்திரங்களும், மகான்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தெய்வங்கள் கண்களாலேயே உணவை ஏற்பதனால் தான் த்ருஷ்டி (போகம்) என்ற சொல் எழுந்தது. பகவானுக்கு நைவேத்தியம் செய்த பொருளைத் தரித்தாலும் புசித்தாலும், உடலும், உள்ளமும் பரிசுத்தமாகி, மனதில் தெளிவும், அன்பும் வளரும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.**

**ஒருவர் உட்கொள்ளும் உணவு எப்படியோ, அப்படியே அவரது உள்ளமும் அமைகிறது. பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட உணவு புனிதம் பெறுகிறது. அதனால்தான் பக்தர்கள் தாங்கள் சாப்பிடுவதற்கு முன்பு, எதையும் மானசீகமாக இறைவனுக்கு நைவேத்தியம் செய்து பிறகு உட்கொள்கிறார்கள்.**

**–எம். நிவேதா, அரவக்குறிச்சிப்பட்டி, திருச்சி.**


அரையரும் இராமாநுசர் கையைப்பிடித்து "வாரும்" என்று சொல்ல, அவரும் பேரருளாளரைச் சேவித்து அரையருடன் திருவரங்கம் கிளம்பினார். இதுவன்றோ அரையர் பெற்ற பரிசு.

(தீதில் யமுனைத் துறைவன் சேவடியோன்) "தீது" என்று குற்றம். "இல்" என்று இல்லாமை. குற்றமற்ற குணங்களை உடையவர் என்றபடி. குற்றமில்லாமையாவது தனக்கு விஷயமாகக் கொள்ளும்போது "இன்னாராவார் இன்னாராகார்" என்னும் குற்றமின்றிக்கே இருக்கை. மாறனேறி நம்பியை ஆட்கொண்ட வரலாற்றில் காணலாம்.

யமுனைத்துறைவன் – யமுனா நதிக்கரையில் எழுந்தருளி இருந்த நாதமுனிகளுக்கு உத்தேச்யராய் காட்டுமன்னார் கோயிலிலே எழுந்தருளி இருந்த ஸ்வாமிகளுடைய திருநாமத்தைக் கொண்ட ஆளவந்தார் என்றபடி. "யாமுநாஹ்வயம்" என்கிறபடியே யாமுநர் என்று கண்ணனுடைய திருநாமத்தையுடைய ஆளவந்தார் என்றும், யோகீந்த்ரராய் அழகாக தித்திக்கும்படி சொல்லுகிற கவிஞர் என்றும் உரைப்பர். அவருடைய திருவடிகள் தூய்மை, அனுபவிக்கும் தன்மை ஆகியவற்றாலே பரஸ்பர ஒப்பான திருவடிகள் என்பர். அத்தகைய திருவடிகளே தஞ்சம் என்று பற்றினவர் அரையர் ஆவார்.

(திருவரங்கப்பெருமாளரையர் திருவடிகள் வாழியே) அரங்கனுக்கு அரையராய் இருந்து இராமாநுசருக்கு அருளிச் செயல் சந்தையும், சரமோபாயமும் நல்வார்த்தைகளும் உபதேசித்தவர். ஸ்ரீராமமிச்ரர் என்னும் மணக்கால் நம்பிகள் திருவடித் தாமரைகளில் வண்டாயிருப்பவர். ஆளவந்தாருடைய சிறந்த புத்திரர். குணத்தில் மிக்கவரும் ஸ்ரீரங்கராஜன் கருணையினால் அளிக்கப்பெற்றவர். ஸ்ரீபாஷ்யகாரரை சீடராகக் கொண்டவர். *''ராமாநுஜார்யஸ்ய வர்ரங்கார்யஸ்து குக்ஷி''* என்கிறபடியே திருவரங்கப் பெருமாள் அரையர் இராமாநுஜருக்குத் திருவயிறாகிறார். அத்தகைய திருவரங்கப்பெருமாள் அரையர் திருவடிகளை வாழ்த்துவோமாக.

*வாழித்திருநாம உரை தொடரும்....*



# ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்...

– திரு.கிருஷ்ண துளசி, சென்னை

### ஸபலா ஏகாதசி

தை மாதத்துக் கிருஷ்ணபக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கண்ணன் தருமருக்கு கூறுகிறார். ஏ, பாண்டுநந்தனா! உன்னிடத்தில் உள்ள பிரீதியினால் இதனைக் கூறுகின்றேன். ஏகாதசி விரதம் இருந்து என்னைப் பூஜிப்பதனால் எனக்கு ஏற்படும் பேரு வகை செயற்கரிய எத்தனை யாகங்களைச் செய்வதனாலும் நான் அடைவதில்லை. ஆகையால் எவ்விதக் கஷ்டம் வந்தாலும், ஊக்கமுடன், இந்த ஏகாதசி விரதத்தை விடாது அநுட்டிப்பாயாக. இந்த தை மாத கிருஷ்ணபக்ஷ ஏகாதசிக்கு “ஸபலா” என்று பெயர். ஸபலா என்ற பெயரே நற்பலனைத் தருவது, மேலான நித்ய பலனைக் கொடுப்பது என்பதாம்.

ஸர்ப்பங்களுள் ஆதிசேஷனும், பக்ஷிகளில் கருடனும், தேவர்களில் விஷ்ணுவும், மனிதர்களுள் அந்தணனும் எவ்வாறு சிறந்தவர்களோ, அதுபோல விரதங்களில் ஏகாதசியே சிறந்தது. இந்த ஸபலா ஏகாதசியில் தீபதானம் செய்வது மிகப் புண்ணியம் தரும். இரவில் கண் விழித்தல் வேண்டும். இதை அநுட்டிப்பவன் இந்த இரவில் எவ்வளவு முறை இமை கொட்டுகிறானோ அத்தனை யாகங்களைச் செய்த பலனைப் பெறுகின்றான். அத்தனை யாகங்களின் பலனும், அனைத்துத் தீர்த்த ஸ்நானப் பலன்களையும் பெறுகிறான்.

சம்பாவதி என்ற நகரினை மாஹிஷ்மதன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஐந்து குமாரர்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் பாப காரியங்களைச் செய்பவனாகவும், பிறன்மனை விழையும் கயமை உடையவனாகவும், மதுபானத்தில் ருசி மிக்கவனாகவும் இருந்தான். துஷ்ட சகவாசம், அந்தண நிந்தை, நாஸ்திக வாதம் இவை அவன் பொழுதுபோக்கு. அரசுப் பணத்தையும் கைவந்த வாறு எடுத்துச் செலவு செய்தான். இவனது போக்கை நினைத்து அரசன் மனம் வருந்தினான். அவனைத் திருத்த அரசன் எடுத்த முயற்சிகள் வீணாயின. அவனை குற்றவாளி ஆக்கி நாடு கடத்தினான். இவன் காட்டில் இருந்து கொண்டு உயிர்க்கொலை, கொள்ளை, சூதாடுதல் செய்து வாழ்க்கை நடத்தினான். ஒரு நாள் காட்டிலிருந்து நகரத்தினுள் நுழைந்து கொள்ளையடிக்கும் பொழுது அரசுப் பணியாளர்கள் அவனையடித்துப் பிடித்து, அவன் திருடிய பொருட்களை பறித்துக் கொண்டு துரத்தி விட்டனர். உயிர் பிழைத்தால் போதுமென்று காட்டை நோக்கி ஓடினான்.

அன்று தசமி. இரவு நல்ல பசி. மறுநாள் கிருஷ்ணபக்ஷ ஏகாதசி. அன்று அவனுக்கு உணவு கிடைக்கவில்லை. பட்டினியாக இருந்து வருந்தி னான். தன்னுடைய நிலையை எண்ணி இறைவனை நினைத்துக் கதறினான். பகலில் ஆகாரமில்லை. இரவில் தூக்கமில்லை. மறுநாள் காலை எழுந்து



நடக்க அவனுக்கு சக்தியில்லை. நகர்ந்து நகர்ந்து சென்று ஒரு மரத்தடியை அடைந்தான். அங்கே பழுத்த பழங்கள் விழுந்து சிதறியிருந்தன. கோவிந்தா! உன் அருளால் எனக்கு இப்பழங்களாவது கிடைத்தனவே என்று கூறி மீண்டும் கோயிலை அடைந்து இறைவன் முன் வைத்து நிவேதனம் செய்து கோவிந்தா! கோவிந்தா! என்று கூவிக் கொண்டே அதைச் சாப்பிட்டான்.

ஸபலா ஏகாதசியை நோற்ற பலன் அவனுக்கு கிட்டிற்று. குமாரா உனக்கு அரச பதவி கிடைக்கும். நீ சுகமடைவாய் என்று அசரீரி வாக்கும் கேட்டது. அது முதல் அவன் நல்லவனானான். சில நாட்களில் அரசன் மரணமடைய மூத்த மகனான இவனைத் தேடி இவனை அரசபீடத்தில் மக்கள் அமர்த்தினர். அவன் 15 வருடங்கள் நன்முறையில் அரசாண்டான். நற்புதல்வர்கள் பலர் பிறந்தனர். ராஜ்யத்தை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு காடு சென்று, தவமிருந்து நாராயண பாராயணனாக இருந்து மோக்ஷத்தை அடைந்தான். ஏ, தர்மபுத்திரா! இந்த ஏகாதசியின் பலனைக் கேட்டாய். இதைக் கேட்டவரும், படிப்பவரும் ராஜசூயயாக பலனைப் பெறுவார்கள் என்றால், இவ்விரதத்தை அனுட்டிப்பவனுக்கு எத்தனை நன்மை ஏற்படும் என்பதை நீயே அறிவாயாக என்று கூறினார்.

**புத்ரதா ஏகாதசி**

புத்ரதா என்ற தை மாத சுக்லபக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கண்ணன் கூறலுற்றான். ஏ தர்ம நந்தனா! பத்ராவதி நகரத்தை ஸுகேது என்ற அரசன் அறம் வழுவாது ஆண்டு வந்தான். அவன் மனைவி சம்பகை தான தருமங்கள் பல செய்தாள். அவனும் யாகங்கள் பல இயற்றி பகவானை வழிபட்டான். இருப்பினும் அவருக்கு மகப்பேறு ஏற்படவில்லை. அரசன் கலங்கினான். என்னோடு சந்ததி அழிந்து விடுகின்றதே. அரசை ஆள ஆண் மகன் இல்லையே! பித்ருக்களுக்கு இனிமேல் தர்ப்பணம்செய்பவர் யார்? என்று வேதனைப்பட்டான்.



ஒருநாள் தனியாளாய் குதிரையில் ஏறிக் கொண்டு பயங்கரமான ஒரு காட்டை அடைந்தான். பலவகையான மரங்களையும், விநோதமான விலங்குகளையும், புள்ளினங்களையும் கண்டு ஒரளவு இன்புற்றான். நண்பகலாயிற்று. அரசனை பசியும் தாகமும் வருத்தின. நல்வினைப் பயனால் அருகில் சிறிது தூரத்தில் ஒரு குளம் இருப்பதைக் கண்டான். அங்கே சென்றதும் அந்தத் தாமரைத் தடாகத்தைச் சுற்றிலும் பல முனிவர்கள் தவம் செய்வதைக் கண்டான்.

குதிரையை விட்டிறங்கி எல்லா முனிவர் களையும் வணங்கினான். முனிவர்கள் அரசனை வரவேற்று ஆசி கூறினர். அவர்கள் தாங்கள் விஸ்வே தேவர்கள் என்றும், அன்று புத்ரதா ஏகாதசி என்றும், நாங்கள் இந்த ஏகாதசியில் விரதம் காப்பதற்காகவும், இன்னும் ஐந்து நாட்களில் பிறக்கப்போகும் மாசி





## தங்கத்திருத்தேர்

பூலோக வைகுண்டமான திருமலையில் பல விழாக்கள் வெகு வைபவமாக கொண் டாடப்பட்டு வருகிறது. அவற்றில் வைகுண்ட ஏகாதசியே சிகரமாகத் திகழ்கிறது. வைகுண்ட ஏகாதசி ஒரு நாள் பண்டிகை அல்ல. அத்யய னோத்ஸத்தின் ஒரு அங்கமாக வைகுண்ட ஏகாதசி திகழ்கிறது. இந்த உத்ஸவம் பகல் பத்து, இராப்பத்து என 24 நாட்கள் கொண்டாடப் படுகிறது. வைகுண்ட ஏகாதசி அன்று காலை திருமலையப்ப ஸ்வாமி உபய நாச்சிமார்களுடன் மாதர்கள் வடம் பிடித்து இழுக்க தங்கத்திருத்தேரில் திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் புரிகின்றார்.

மாதத்தில் இந்த புண்ணிய வாவியில் மகாஸ்நானம் செய்யவும் வந்துள்ளோம் என்றும் கூறினார்கள்.

அவர்களிடம் தனக்கு மக்கட் பேறில்லா குறையைக் கூறி அருள் பாலிக்க வேண்டும் என்று பக்தி தோன்ற பிரார்த்தித்தான். அவர்கள் நாளைய தினம் புத்ரதா என்ற ஏகாதசி. புத்திரனைக் கொடுக்கும். இதில் உபவாசம் இரு. நாராயணனை வழிபட்டு பூஜிப்பாயாக. உனக்கு புத்திரப்பேறு உண்டாகும் என்று கூறி யோகத்தில் அமர்ந்தனர். அரசனும் வாவியில் நீராடி பகவானைப் பூஜித்து உபவாசம் இருந்து மறுநாள் துவாதசி பாரணை செய்தான். பிறகு தன் நகர் அடைந்தான். சில நாட் களில் ராணி கருவுற்றாள். நல்ல புத்திரன் ஜனித்தான்.

ஏ தர்மபுத்திரா! இந்த ஏகாதசி பலனைக் கேட்டாய். என்னிடத்தில் பக்தி பூண்டு, நம்பிக்கை கொண்டு உபவாசம் இருந்து அநுட்டிப்பார்க்கு மகப்பேறு உண்டாகும். இவ்வரலாற்றைக் கேட்போர்க்கு அக்னிஷ்டோமம் என்ற யாகம் செய்த பலன் கிட்டும். எல்லா பாபங்களையும் போக்கும்; நல்வித்தையும் புகழும் உண்டாகும்.

## ஸப்தகிரி அக்டோபர் 2023 விடைகள்

1. திருமால்.
2. திருவேங்கடவன்.
3. திருமங்கையாழ்வார்.
4. திரிவிக்ரமன்.
5. வேதாந்த தேசிகர்.
6. ஸ்ரீகொலுவு ஸ்ரீநிவாசர்.
7. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.
8. தரிகொண்ட வெங்கமாம்பா.
9. பிரபோதினி.
10. ஆனந்தாசலம்.
11. சேஷாசலம்.
12. திருமலைநம்பி.
13. சஹஸ்ர கலசாபிஷேகம்.
14. ஸ்ரீவேங்கடேச பெருமாள்.
15. ஜலப்பிரசாதம்.



## போட்டி எண். 15




**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் சிவநிதி,
   வடக்கு சற்குண வீதி,
   நாகர்கோவில்மாவட்டம்.
2. செல்வி ஜா.ஜெய்ஹரிதா,
   திசையான் விளை, நெல்லை
   மாவட்டம்.
3. செல்வி கோ.பிரண்யா,
   ராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.



# டிசம்பர் 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.




தொழில் துறையில் லாபம் உண்டு.குடும்பத்தார் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நீண்ட நாள் பாக்கிகள் வசூலாகும். தெய்வ தல யாத்திரை செய்வீர்கள். நல்ல தரிசனமும் கிடைக்கப் பெறுவீர்கள். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தந்தையின் ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். மொத்தத்தில் இல்லத்தரசிகளுக்கு ஏற்றம் தரும் மாதமிது.




மாதத்தின் இறுதியில் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில்துறையில் இருந்த பிரச்சனைகள் குறையும். புதிய தொழிலில் முயற்சிகளை மேற் கொள்ளலாம். வெளிநாட்டு வேலைவாய்ப்பு உண்டு. மனைவியின் உடல் உஷ்ணமாகும். நிலம், வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மாணவர்களுக்கு கடும் முயற்சி தேவை. பொதுவாக நல்ல பலன்கள் அதிகமாக நடக்கும்.




தொழில்துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். உடல்நலப் பிரச்சனைகள் குறையும். புதிய தொழில் முயற்சிகள் வெற்றி தரும். குழந்தையின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடின நேர்முகத்தேர்வினால் வெற்றி உண்டு.பூர்வீக சொத்து பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். சாதனைகள் செய்யும் மாதமிது.




தொழில்துறையில் அலைச்சலுடன் வெற்றிகள் கிட்டும். எந்த காரியத்திலும் முதலில் தடையும், பின்னர் வெற்றியும் கிட்டும். காரமான உணவுகளையும், கிழங்கு வகைகளையும் தவிர்ப்பது நல்லது. மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண் பெறுவர். முயற்சியால் முன்னேறும் மாதமிது.




தொழில்துறையில் வெற்றிகள் கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். திருஷ்டியால் சில பிரச்சனைகள் ஏற்பட்டு சரியாகும். குழந்தைகளின் ஆரோக்கிய பிரச்சனைகள் தீரும். புதிய நிலம், வாகனம் வாங்கும் யோகம் உண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவுவர்.மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். தெய்வ சங்கல்பத்தினால் முன்னேற்றம் பெறும் மாதமிது.




தொழில்துறையில் இருந்த பிரச்சனைகள் குறையும். ஓரளவு பணவரவு உண்டு. புதிய தொழில் முயற்சிகளை குறைந்த முதலீட்டில் செய்யலாம். உடல் சூட்டினால் செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம். கணவன் மனைவிக்குள் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு நீங்கும். இரவு நேர பயணங்களைத் தவிர்க்கவும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.




தந்தை, சகோதரர் வழியில் தனலாபம் உண்டு. குடும்ப பிரச்சனைகள் தீரும். தொழில் அலைச்சலால் தூக்கம் குறையும். நண்பர்கள், உறவினர்கள் தக்க சமயத்தில் உதவுவர்.குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பண புழக்கம் உண்டு. குடும்பத்தில் நிம்மதி உண்டு. நிலம், வாகனம் வாங்குவீர். நல்ல பலன்களைத் தரும் மாதம்.




பண விஷயத்தில் மிகுந்த கவனம் தேவை. கடன்வாங்குவதையும், கொடுப்பதையும் தவிர்க்கவும். காரமான உணவுகளை கூடுமான வரை உண்பதை தவிர்க்கவும். பெற்றோர் ஆரோக்கியத்தில் சிறு குறைபாடு ஏற்பட்டு பின்னர் சரியாகும். குழந்தைக ளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை.கடும் முயற்சியின் மூலம் முன்னேறும் மாதமிது.




தொழில் துறையில் எதிர்பார்த்த லாபம் உண்டு. செலவிற்கேற்ற வருமானம் உண்டு. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். நிலம், வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சகோதரர்களுக்கும் நன்மை உண்டு. பெற்றோர் ஆரோக்கியத்தில் சிறு குறைபாடு ஏற்பட்டு பின்னர் சரியாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர்.சகல நன்மைகள் தரும் மாதமிது.




தொழில் துறையில் அலைச்சலும், வளர்ச்சியும் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வும், இடமாற்றமும் உண்டு. குடும்பத்தில் சிறிது மருத்துவச் செலவுகள் உண்டு. செலவிற்கேற்ற வருமானம் உண்டு. உங்கள் தோஷங்களுக்கு பரிகாரம் செய்ய ஏற்ற மாதம். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத் தில் நல்ல முன்னேற்றமும், யோகமும் பெறும் மாதமிது.




பிடிவாதமாக காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர். தொழில் வளர்ச்சி உண்டு. மருத்துவத் தால் உடல் ஆரோக்யம் மேம்படும். பணப்புழக்கம் உண்டு. தொழிலில் புது முயற்சிகள் மேற்கொள்ளலாம். நண்பர்கள், உறவினர்கள் தக்க சமயத்தில் உதவுவர். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர்.சகோதரர் வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். நல்ல யோகமான மாதமிது.




குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தாராள பண புழக்கம் உண்டு. தொழில் அலைச்சலால் தூக்கம் குறையும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமையும். மனைவி குழந்தைகளால் நிம்மதி உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். குடும்ப பிரச்சனைகள் தீரும். நண்பர்கள், உறவினர்கள் தக்க சமயத்தில் உதவுவர். நிலம், வாகனம் வாங்குவீர். நல்ல யோகமான மாதமிது.



# சந்தேகம் தெளிவோம்

**கே: புரட்டாசி மாதம் அவதாரம் செய்த ஆசார்ய புருஷர்களான மஹான்கள் யார்?**

ப : புரட்டாசி மாதம் பல ஆசார்ய புருஷர்கள், மஹான்கள் அவதரித்துள்ளனர். அவர்களில் சில விசேஷ ஆசார்யர்கள் –

புரட்டாசி திருவோணம் – ஸ்ரீவேதாந்த தேசிகர், ஸ்ரீப்ரஹ்மதந்த்ர ஜீயர் (ஸ்ரீபரகால மடம்), புரட்டாசி அனுஷம் – ஸ்ரீதிருமலை நம்பிகள் (ஸ்ரீதாதாசார்யர்), புரட்டாசி கேட்டை – ஸ்ரீஆதிவண் சடகோப ஜீயர் (ஸ்ரீஅஹோபில மடம்), புரட்டாசி பூராடம் – ஸ்ரீ திருக்குடந்தை தேசிகன் (ஸ்ரீமுனித்ரய குரு பரம்பரை), புரட்டாசி புனர்வசு – பொன்னடிக்கால் ஜீயர் (ஸ்ரீவானமாமலை மடம்) ஆகிய இவர்கள் முக்கியமாக குரு பரம்பரையை வளர்த்தவர்கள்.

**கே : இறைவன் அரக்கர்களைத் திருத்தாமல் அவர்களைக் கொல்வது எதனால்?**

இறைவன் அரக்கர்களைத் திருத்தவே முயல்கிறான்; இராவணனுக்கு சீதா பிராட்டியார் நல்லதை உபதேசம் செய்தார். மேலும், விபீஷணன் முதலிய நல்லவர்களும் சொன்னார்கள். ஆனால், அவன் கேட்கவில்லை; அதுபோல கம்சன் முதலியவரையும் கூட நல்ல புத்தி சொல்லி திருத்த வசுதேவர் முதலிய பலர் முயற்சி செய்தனர்; ஆனால், அவர்கள் யாரும் கேட்டு திருந்தவில்லை; வேறு வழியில்லாமல், உலக நன்மைக்காக அவர்களைக் கொல்ல வேண்டியதாயிற்று.

சிறு குழந்தை கையில் கத்தி இருந்தால், அம்மா முதலில் நல்லபடி சொல்வாள்; அதைக் கீழே வைத்து விடு என்பாள்; இல்லாவிட்டால், அது தன்னைத் தானே குத்திக் கொண்டு விடும் என்று பயம்; அது கேட்டால், பிரச்சனையில்லை; கேட்கவில்லை என்றால், குழந்தையை அடித்து கத்தியைப் பிடுங்கி வைப்பாள்; அது அக்குழந்தையின் நன்மைக்காக பரிவுடன் செய்வதுதான்.

அதுபோல்தான் அரக்கர்களின் புத்தியும் கத்தி போல; பெருமான் தாய் போல; நல்லபடி கேட்டு நடந்தால் நல்லது; இல்லையானால், எல்லோரையும் குத்தும் கத்தியைப் பிடுங்கிப் போடுவதுதான் நல்லது.

**கே : சனாதன தர்மம் என்றால் என்ன? அது ஏன் விசேஷமானது?**

ப : சனாதன தர்மம் என்றால், நிலையான எல்லா காலத்துக்குமான தர்மம் என்று பொருள்.

ஆதி காலத்தில் மனிதர்கள் கூட மிருக வாழ்க்கையை நடத்தி வந்தனர். மிருகங்கள் போல, காட்டில் குகைகளில் வசிப்பது மட்டுமல்ல; மிருகங்கள் போல, கூச்சல், சண்டை, ஹிம்சை எல்லாம் சஹஜமாக இருந்தன; மனிதனை மனிதன் அடித்தல், கும்பல் கும்பலாக சண்டை இடுதல், பெண்களைத் துன்புறுத்தி தாம் அனுபவித்தல் முதலிய எல்லாம் மிருகம் போல மனிதர்களுக்கும் இருந்தன.

அப்போது நம் பாரத தேசத்தில் முன்னோர்களான முனிவர்கள் மனிதர்களுக்கு என்று சில வழிநெறிகளை வகுத்து தந்தனர். மனிதன் பொய் சொல்லக்கூடாது; பிறரைத் துன்புறுத்தக் கூடாது; பிறருக்கு உதவி செய்ய வேண்டும்; பெண்களை மதித்து ஒருவனுக்கு ஒருத்தி என்னும் முறையைக் கடைபிடிக்க வேண்டும். இந்த மனிதத்தன்மைகளை ஊட்டுவதற்காக கடவுள் நம்பிக்கை, தர்மம், புண்ய–பாபம், சாஸ்த்ரம் முதலிய நெறிமுறைகளை வகுத்து தந்தனர்; அதனால், மிருகமாக இருந்து வந்த மனிதன் மாறி மனிதனாக ஆனான். இந்த நெறிகள் தாம் சனாதன தர்மம் ஆகும். இதனைப் பற்றி இராமாயணம், மஹாபாரதம் முதலியவை சொல்கின்றன.

**–நாவல்பாக்கம் ஸ்ரீஉ.வே. வாஸுதேவாசார்யார், திருவனந்தபுரம்.**

முன்னொரு காலத்தில் அம்பரீஷர் எனும் சக்ரவர்த்தி தெய்வ ஆராதனையில் மனதை செலுத்தி வந்தார். அதிலும் அவரின் மனதில் மஹாவிஷ்ணு மட்டுமே ஆட்சி செலுத்தி வந்தார். பெருமாளுக்குண்டான விரதங்களையும் நியமப்படி கடைபிடித்தார். ஒவ்வொரு துவாதசி விரதத்தின் போதும் பெருமாளை பூஜித்து தன்னை நாடி வரும் இறையடியார்களுக்கு அன்னம் அளித்து அவர்களின் பசியைப் போக்கியபின்பே, தான் போஜனம் செய்து விரதத்தை முடிப்பது வழக்கம். அப்படி ஒரு துவாதசியன்று வழிபாடு மற்றும் தானங்களை முடித்து உண்ணப்போகும் சமயம் துர்வாச மகரிஷி அரண்மனைக்கு வந்தார். அவர் வருகை தந்த செய்தியை அறிந்ததும் அம்பரீஷர் தன் பசிமறந்து, உண்பதை விடுத்து அவரை வரவேற்று உணவுக்கு வரும்படி அன்புடன் அழைத்தார்.

அரசர் உணவுக்கு அழைத்ததும், கொஞ்சம் பொறு மன்னா நான் சென்று யமுனை நதியில் நீராடி விட்டு வருகிறேன் எனக் கூறிச் சென்றவர் வெகு நேரம் கழிந்தும் வராததால் அரசர் விரதத்தை முடித்தார். துர்வாசர் யமுனை நதியிலிருந்து வந்ததும் அரசர் தனக்கு முன்னதாக விரதம் முடித்ததை அறிந்து அவர் மேல் கடுங்கோபம் கொண்டு தம் சடையிலிருந்து சில ரோமங்களை எடுத்து அவற்றை ஒரு பெரும் பூதமாக்கி அரசரின் உயிரை எடுக்க உத்தரவிட்டார்.

அம்பரீசரோ பெருமாளின் பக்தனான தான் செய்தது சரியே என்று பெருமாளின் நினைவுடன் தான் இருந்த இடத்தை விட்டு அசையாமல் அவரிடமே தன்னைக் காப்பாற்றும்படி கண்களை மூடி விஷ்ணுவின் நினைப்பில் ஆழ்ந்து விட்டார். விஷ்ணு பகவானின் திருக்கரத்தில் இருந்த சுதர்சன சக்கரம் பக்தரைக் காக்க அவர் திருக்கரத்திலிருந்து இறங்கி துர்வாச ரால் ஏவப்பட்ட பூதத்தை கொன்று, பின் ஏவிவிட்ட அவரையும் துரத்தத் துவங்கியது. சக்கரம் விடாமல் தன்னைத் துரத்துவதைக் கண்டு பயந்து போன முனிவர் தன்னைக் காப்பாற்றும்படி தேவர்களிடம் சென்று சரணடைந்தார். அனைவரும் விஷ்ணுவின் சக்கரத்தை எதிர்க்க எவராலும் முடியாது உங்களை காத்துக் கொள்ள தாங்கள் விஷ்ணுவிடமே சென்று சரண் அடையுங்கள் என்று சொல்ல, துர்வாசரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பெருமாளிடம் தன்னை மன்னிக்குமாறு சரணடைந்தார்.

நீதிக்கதை

# அதிக கோபம் ஆபத்தைத் தரும்



அம்பரீசரைக் காக்க இச்சக்கரம் புறப்பட்டது. இதை என்னால் தடுக்க இயலாது. அம்பரீஷன் மனது வைத்தால் மட்டுமே உம்மைக் காப்பாற்ற இயலும். அவனைச் சரணடையும் என்று மாயப்புன்னகை புரிய, மிகுந்த வெட்கத்துடன் தான் ஒரு சிறந்த பக்தனிடம் தோற்றதை ஒப்புக் கொண்டு பின்னால் சக்கரம் துரத்த மீண்டும் அரசரிடமே வந்து சரணடைந்தார் துர்வாச முனிவர். அம்பரீசரும் கண்களைத் திறந்து அவரின் நிலை அறிந்து மிகப் பெருந்தன்மையுடன் முனிவருக்கு அபயம் அளித்து சுதர்சன சக்கரத்திற்கு வேண்டிய வழிபாடுகள் செய்து அதை சாந்தப்படுத்தி முனிவரை மன்னித்து விடுமாறு வேண்டினார். மனமகிழ்ந்த சுதர்சனமும் பெருமாளின் பக்தனின் வேண்டுதலுக்கிணங்கி மீண்டும் பகவானின் திருக்கரத்தைச் சென்றடைந்தது.

நிலையறியாத தன் கடுங்கோபம் ஏற்படுத்திய ஆபத்தில் இருந்து தப்பிய துர்வாசர் தூயபக்தியின் முன் தன் தவவலிமை ஒன்றும் இல்லை என்பதையும் உணர்ந்தார்.

– திருமதி சுபா தியாகராஜன்,
சேலம், 9994722352

# பாठ : नवविंशः ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-29

| | | | |
|---|---|---|---|
| अस्मान् | = எங்களை | वृक्षेभ्यः | = மரங்களிலிருந்து,மரங்களினை,மரங்களுக்கு |
| आहूय | = அழைத்து (கூப்பிட்டு) | पृष्ट्वा | = கேட்டு |
| वृक्षात् | = மரத்திலிருந்து, மரத்தினால், மரத்தைக் காட்டிலும் | पास्यति | = குடிப்பான் |
| | | पतति | = விழுந்து கொண்டிருக்கின்றான் |
| पातुम् | = குடிப்பதற்கு | चरति | = நடந்து கொண்டிருக்கின்றான் |

## வினாக்கள்

1. किमरे क्षीरं पास्यसि किम्?
2. बालकः वृक्षात् अपतत्।
3. त्वं तत्र मा गच्छ।
4. ते बालकाः दौष्ट्यं करिष्यन्ति।
5. ब्राह्मणाः स्नानं कृत्वा तटाकात् आगच्छन्ति।
6. अनन्तरं भोजनं करिष्यन्ति।
7. अहमपि स्नानार्थं गच्छमि।
8. भोजनार्थम् आलस्यं मा कुरुत।
9. तव जनकः एतावत्पर्यन्तं ग्रामात् न आगच्छत्।
10. श्वः आगमिष्यति किं वा; तवानुजं प्रक्ष्यसि चेत् सः वदिष्यति।

1. அந்தச் சிறுவனை பால் அருந்த அழையுங்கள்.
2. அங்கு உள்ள என்னுடைய கட்டிலை இங்கு எடுத்துக் கொண்டு வாரும்.
3. நான் எடுத்துக் கொண்டு வரமாட்டேன்.
4. உன்னுடைய தம்பியை எடுத்துக் கொண்டு வரச் சொல்.
5. நீ சிறுவனைக் கேட்டு அவ்விடத்திற்குச் செல்.
6. அந்தச் சிறுவர்கள் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார்கள்.
7. எங்களுடைய பழங்களை யார் தின்றார்கள்?
8. நீங்களே தின்றீர்கள்.
9. ஐயோ! மரத்திலிருந்து பழங்கள் விழுந்தன.
10. உங்கள் சொம்பில் சிறிது பால் இருந்தால் நான் குடிப்பேன்.

## விடைகள்

1. ஏண்டா பால் குடிப்பாயா என்ன?
2. சிறுவன் மரத்திலிருந்து விழுவான்.
3. நீ அங்குச் செல்ல வேண்டாம்.
4. அந்தச் சிறுவர்கள் தொந்தரவு செய்யக் கூடியவர்கள்.
5. பிராம்மணர்கள் குளித்து விட்டு குளத்திலிருந்து வருவார்கள்.
6. பிறகு உணவு உண்பார்கள்.
7. நானும் குளிப்பதற்காக செல்வேன்.
8. சாப்பிட தாமதம் செய்யாதீர்.
9. உன்னுடைய தந்தை இதுவரை கிராமத்திலிருந்து வரவில்லை.
10. நாளை வருவானா என்ன? உன்னுடைய தம்பியைக் கேட்டால் அவன் சொல்லுவான்.


1. तं बालकं क्षीरं पातुम् आहूय।
2. तत्र मम शय्या अस्ति अत्र आनय।
3. अहं न आनयामि।
4. तव अनुजम् आनय।
5. त्वं बालकं पृष्ट्वा तत्र गच्छ।
6. ते बालकाः दौष्ट्यं कुर्वन्ति।
7. अस्माकं फलानि के अखादन्?
8. यूयमेव अखादत खलु।
9. अहो! वृक्षेभ्यः फलानि अपतन्।
10. तव पात्रे किञ्चित् क्षीरं अस्ति चेत् अहं पास्यामि।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

## பல்சுவைப் பகுதி




## சித்திரப் பகுதி



படத்தைப் பாருங்கள் !
வண்ணம் தீட்டுங்கள் !!







பெரியாழ்வாரின் மகள், கையில் கிளியும், தோளில் மாலையும் சுமந்து, ஸ்ரீகிருஷ்ணரை துதித்து, திருவரங்கனோடு ஐக்கியமானவள்

...............



எந்த தெய்வதிற்கு யார் சிறந்த பக்தர் என்று பொருத்துங்கள் !

ஸ்ரீகிருஷ்ணர் – மீராபாய்
ஸ்ரீராமர் – அனுமன்
திருவேங்கடவன் – அன்னமய்யா



## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

பேசேல் ஔவியம், சுருக்கேல் அஃகஞ்

ஔவியம் பேசேல், அஃகஞ் சுருக்கேல்



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 13 | 17 | 18 | 16 | 19 |
| | | ← | 20 | 19 | 11 | 17 |
| 10 | 18 | 13 | 12 | 18 | 15 | 19 |
| 19 | 17 | 15 | 16 | 17 | 11 | 13 |
| 16 | 20 | 14 | 16 | 15 | 18 | 17 |
| 18 | 11 | 13 | 12 | 18 | 20 | 15 |
| 15 | 20 | 19 | 11 | ← | | |



### பாதையைக் கண்டுபிடி

வாழ்வியல் நெறிகளை "கீதை" வடிவில் போதிக்கும் ஸ்ரீகிருஷ்ணரை அர்ஜுனன் அடைய 11 முதல் 20 வரை உள்ள எண்களை இணைத்து பாதையைக் காட்டிடுங்கள்




இந்தியாவின் நுழைவு வாயில், கர்நாலா, லோனாவாலா, நாசிக் பஞ்சவடி ஹனுமன் ஆலயம் போன்றவை அமைந்திருக்கும் மாநிலம் : ...............

மஹாராஷ்டிரா

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-17

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. தை மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசியின் பெயர் ..................................................
2. ஸ்ரீராமமிச்ரர் என்றழைக்கப்படும் ஆசாரியர் ..................................................
3. காஞ்சி பேரருளாளனுக்கு திருவாலவட்ட கைங்கர்யம் செய்தவர் ..................................................
4. திருநீரகம் திவ்யதேசம் அமைந்துள்ள மாநகரம் ..................................................
5. மார்கழி வளர்பிறையில் வரும் ஏகாதசியின் பெயர் ..................................................
6. திருமலையில் குமாரஸ்வாமி தவம் புரிந்ததாகக் கூறப்படும் தீர்த்தம் ..................................................
7. திருமலையில் மார்கழி மாதத்தில் சுப்ரபாதத்திற்கு பதிலாகப் பாடப்படுவது ..................................................
8. மாணிக்கவாசகர் அவதரித்த திருத்தலம் ..................................................
9. பகவான் கிருஷ்ணன் தமக்கு விருப்பமான மாதமாகக் கூறுவது ..................................................
10. பகவத் கீதையின் சாரங்களை கொண்ட பிரபந்தம் ..................................................
11. ஸ்ரீராமபிரான் அவதரித்த யுகம் ..................................................
12. தி.தி.தே.வின் மொபைல் செயலி ..................................................
13. ஆழ்வார்களின் பாசுரங்களை நாடெங்கிலும் பரப்பும் தி.தி.தே.வின் துறை ..................................................
14. இராப்பத்து நாட்களில் நம்பெருமாள் எழுந்தருளும் மண்டபம் ..................................................
15. ஸ்ரீராமபிரான் அவதரித்த மாதம், நட்சத்திரம் ..................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 25.12.2023.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

**சக்கரத்தை சுற்றுங்கள்!**
**அதே வண்ணக்கட்டத்தில் எழுதுங்கள்!!**






## விடைகள்

1) கௌசல்யை, 2) சீதை, 3) குகன், 4) சடாயு, 5) அனுமன், 6) பரதன், 7) அயோத்தியா, 8) இலங்கை.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்




1) பறவை, 2) கொடி, 3) கொடியின் கயிறு, 4) வாத்து, 5) தாமரை மலர்,
6) மீன், 7) நீரலை.

# கழுதையும் குருவே!

சித்திரக் கதை

கதை மூலம் :திருமதி அ.ஸ்ரீநிதி
சித்திரம் :திரு. து.கமலக்கண்ணன்

குருகுலத்தில் குருவானவர் தினமும் கல்வி போதனைகள் முடிந்தவுடன் சிறிது நேரம் சீடர்களுடன் கலந்துரையாடுவது வழக்கம். ஒரு நாள் சீடர்கள் குருவிடம்...





காலையில் கழுதையோ, தனது முதுகில் அழுக்கான துணிகளை சுமந்துச் சென்றது. அதன் முதுகில் அரசனின் துணிகள், பணியாளர் மற்றும் மக்களின் துணிகள் எனப் பலரின் அழுக்குத் துணிகளை சுமந்துக்கொண்டு சென்றது. அது இந்த துணிகள் அழுக்காக இருக்கின்றனவே என்றும், அது துர்நாற்றம் அடிக்கிறதே என்றும் எண்ணவில்லை. இராஜாவின் துணி சுமக்கிறேனே என்று கர்வமும் கொள்ளவில்லை. பணியாளர்களின் துணியைச் சுமக்கிறேனே என்று வருத்தமும் படவில்லை.

அதேபோன்று, மாலையில் அக்கழுதையோ தனது முதுகில் துவைத்த, தூய்மையான, வாசனை மிகுந்த துணிகளைச் சுமந்துக் கொண்டு வந்தது. அதன் அருகில் காலையில் மூக்கை மூடிக்கொண்டு வந்த கழுதையின் உரிமையாளன் அப்பொழுது சந்தோஷமாக கழுதையுடன் வந்துக் கொண்டிருந்தான். அந்த மனிதனிடம் ராஜா, சேவகன், மற்றும் மக்கள் துணிகள் என்றும், துர்நாற்றம்–வாசனை என்ற வேறுபாடுகளும் தெரிந்தன. ஆனால் உழைப்பது ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட கழுதையோ எவ்வித வேறுபாடும் இன்றி ஒரே மனநிலையில் நடந்து வந்தது.



இன்பம் வரும்போது துள்ளிக்குதிக்காமலும், துன்பம் வரும்போது துவண்டு போகாமலும் இருக்கும் ஞானத்தையும், மேலானவன், கீழானவன் என்ற வேறுபாடு பார்க்காத குணத்தினையும், எப்பொழுதும் ஒரே மனநிலையில் இருக்க வேண்டும் என்பதையும் அந்த கழுதையின் வாயிலாக நான் கற்றுக்கொண்டேன்.
ஆதலால் அந்த கழுதையும் எனக்கு ஒரு குருவானது என்றார் குரு.



முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________
_______________
_______________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஒ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

27–10–2023 முதல் 29–10–2023 வரை திருப்பதியில் அமைந்துள்ள கச்சபி அரங்கில் ஆயுஸ் அமைச்சகம், அகில இந்திய ஆயுர்வேத மஹாசம்மேளனம் மற்றும் தி.தி.தே. ஸ்ரீவேங்கடேஸ்வரா ஆயுர்வேதக் கல்லூரி இணைந்து நடத்திய ‘ஆயுர்வேத பர்வம் –2023’ தேசிய மாநாடு. இந்நிகழ்ச்சியை தி.தி.தே. இணைச் செயலாட்சித் தலைவர் (எச்.&இ.) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, ஆயுர் வேதத்தின் சிறப்புகளையும், கோவிட்–19–ன் போது ஆயுர் வேதத்தின் பங்கு குறித்தும் உரையாற்றிய போது, ஆயுர் வேதத்தினை உலகளவில் கொண்டு செல்லல் வேண்டும் என்றார்
















SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-11-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

